விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 11 வியாழக்கிழமை (27.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282

## பறவைக்காவடி எடுத்து — தியாகி திலீபனுக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தியாகி திலீபன் உண்ணா விரதமிருந்து உயிர் நீத்தார். இவருடைய 31-வது ஆண்டு நினை 02☛

## சாவகச்சேரி நிதி நிறுவனத்தில் கத்தி முனையில் கொள்ளை

### குறித்த நிறுவன பெண் பணியாளர் உட்பட மூவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் தனியார் நிதி நிறுவனம் ஒன்றுக்குள் கத்திமுனையில் இடம்பெற்ற சுமார் 18 லட்சம் ரூபாய் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அந்த நிறுவனத்தின் பெண் பணியாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நகர் நெடுஞ்சாலையிலுள்ள நிதி நிறுவனம் ஒன்றில் கடந்த 19ஆம் திகதி புதன்கிழமை காலை வழமைபோல பணிகளை ஆரம்பித்த பணியாளர்கள். 22☛

## சமையல் எரிவாயு

## 195 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டர் வகைகளின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படுகிறது என்று நுகர்வோர் பாதுகாப்பு அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயுவின் 24☛

## எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம்

# சர்வதேசம் தலையிடுவதற்கு இலங்கை இடமளிக்காது



### ஐ.நா சபையில் உலக தலைவர்கள் முன்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரை

(நியூயோர்க்) உலகத்தின் மிகவும் பலம்வாய்ந்த ஒரு பயங்கரவாத அமைப்பே இலங்கையின் பாதுகாப்பு படையினரால் தோற்கடிக்கப்பட்டது. ஆகையால்தான் இன்று இலங்கை பிரிக்கப்படாத, சிதைவடையாத, நிலையான சமாதானத்தைக் கொண்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது. எமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு எம்மால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளும் அர்ப்பணிப்புக்களும் மிக முக்கியமானவையாகும். சர்வதேசத்தின் தலையீட்டையும் அச்சுறுத்தல்களையும் ஒரு சுயாதீன நாடென்ற வகையில் ஒருபோதும் ஏற்க நாம் தயாராக இல்லை. இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உலக நாடுகளின் தலைவர்களிடம் வலியுறுத்தினார். (23-ம் பக்கம் பார்க்க...)

## அகிம்சை வழி போராட்டங்களுக்கு தியாகி திலீபன் முன்னுதாரணம்

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அகிம்சை வழியில் போராடி உயிர் நீத்த திலீபனின் வாழ்க்கை இன்றைய ஜனநாயக, அகிம்சை வழி அரசியல் போராட்டங்களுக்கு ஒரு முன்னோடியாக அமைந்திருக்கின்றது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் சுற்றுலாக் கண்காட்சிகள், கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் உணவுத் திருவிழா ஆகிய நிகழ்வுகளை நேற்று புதன்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தியாகி திலீபன் 31 வருடங்களுக்கு முன் இந் நாளில் உயிர் 23☛

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்

## தமிழர் தாயகம் எங்கும் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் 31-வது ஆண்டு நினைவேந்தல் நேற்று தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசம் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் விடிவுக்காக ஐந்து அம்சக்கோரிக்கை 23☛

## தாயார் முறைப்பாடு; வாளுடன் மகன் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

சுமார் 4 அடி நீளம் கொண்ட கூரிய வாள் ஒன்றை வீட்டில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மகனின் அச்சுறுத்தல் தொடர்பில் தாயார் வழங்கிய 23☛

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்தார் ஜனாதிபதி மைத்திரி



24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



BOC Travels (Pvt) Ltd
SUBSIDIARY OF BANK OF CEYLON

## விசேட முறையில் வடிவமைக்கப்பட்ட தென் இந்திய திருத்தல யாத்திரை



இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்



- 16 பேர் கொண்ட குழுக்கள்
- தங்குமிட, உணவு வசதி (10 நாட்கள்)
- விசா பயணச்சீட்டு ஒழுங்குகள்
- அனைத்து போக்குவரத்து ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம் உட்பட)

**பிரயாண திகதி ஐப்பசி மாதம் 19ஆம் திகதி முதல்**

நம்பகரம், பாதுகாப்பு, உத்தரவாதம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

தொடர்புகளுக்கு : இலங்கை வங்கி, (மேற்தரக் கிளை)
1ம் மாடி, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்
021 222 4575 - 76 / 070 384 9335 / 070 395 1794

(சி-3952)


## பறவைக் காவடி...

வேந்தல் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதைமுன்னிட்டு யாழ்.நல்லூரில் திலீபன் உயிரிழந்த இடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் இரு இளைஞர்கள் தென்மராட்சி பகுதியிலிருந்து தூக்கு காவடி எடுத்து வந்து தமது அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.(ம-9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



**புதிய இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு**

உடையார் லேன், பொற்பதி வீதி, கொக்குவிலில் நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0763156520



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

**நிறஞ்சன் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.

தொடர்பு:
0763836129


## கண்ணீர் அஞ்சலி



அமரர் பொன்னுத்துரை மகாலிங்கம்

கடந்த 25.09.2018 செவ்வாய்க்கிழமை அன்று காலமான எமது ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையத் தலைவர் **ஐயாத்துரை மகேந்திரன்** அவர்களின் பாசமிகு மைத்துனர் **பொன்னுத்துரை மகாலிங்கம்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையம்**


# உர மானிய வேலைத்திட்டம்

## 2018/19 பெரும் போகம்

விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு **35,000** மில்லியன் ரூபாய் அரச நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மானிய உர வேலைத்திட்டத்தை அரசாங்கத்தினால் செப்டம்பர் மாதம் 07 ஆம் திகதி இலிருந்து 2018/19 பெரும் போகத்துக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



"இப்போது பயமின்றி பயிர் செய்வோம்.
உங்களுடன்
கமத்தொழில் அமைச்சு
இருக்கிறது"

மஹிந்த அமரவீர
கமத்தொழில் அமைச்சர்



பெரும் போக உர மானிய விநியோகத்திற்கான தமிழ் மொழி மூல சுற்றறிக்கை வெளியீட்டு நிகழ்வு

| | |
|---|---|
| திகதி | 27 செப்டம்பர் 2018 |
| நேரம் | காலை 9.00 மணிக்கு |
| இடம் | வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் |

(சி-3971)

வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது
தேசிய உரச் செயலகம் | கமநல அபிவிருத்தித் திணைக்களம்
கமத்தொழில் அமைச்சு

# தியாகத்தின் உச்சம் திலீபனுக்கு நல்லூரில் அஞ்சலி

























தமிழ் மக்களின் விடிவுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த தியாகி திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நல்லூரில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வட கிழக்கு மூலையில் தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த இடத்தில் சரியாக 10.48 மணிக்கு அக வணக்கம் செலுத்தப்பட்டது. அதேநேரத்தில் கைதடியில் இருந்து இரண்டு தூக்குக் காவடிகளில் வந்த இரு உணர்வாளர்கள் திலீபனின் நினைவுத்தூபியில் தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து தியாகி திலீபன் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முதன்மைச் சுடரேற்றியதுடன், தியாகி திலீபனின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து, நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் தமது அஞ்சலியைச் செலுத்தினர். (படங்கள்:- பொ.சோபிகா, ஐ.சிவசாந்தன்)

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
27 - 05 - 1949

உதிர்வு
25 - 09 - 2018

## பொன்னுத்துரை மகாலிங்கம்

உரும்பிராயிலிருந்து ஊரெழுவுக்குள் இல்லறம் புகுந்து தமது தந்தையின் பெயரைக் காப்பாற்றி வந்த மகாலிங்கம் அவர்களை நோக்கி காலன் மோட்டார் வண்டி வடிவத்தில் வந்து கொண்டு போவான் என்பதை நாங்கள் கனவில் கூட நினைத்திருப்போமா, யாழ்.மாவட்டத்தில் தாரகா றான்ஸ்போர்ட் லொறிச் சேவை என்றால் அனைவருக்கும் தெரியும். அந்தளவுக்கு அன்று தொடங்கி இன்றுவரை லொறிச் சேவையைப் புரிந்து வந்துள்ளீர்கள். எங்கள் குடும்பத்தின் சகல நிகழ்வுகளிலும் தங்களுடன் பிள்ளைகள், மருமக்கள் அனைவரையும் அழைத்து வந்த பக்குவத்தை அவர் வாழ்க்கையில் நாம் காண்கின்றோம். நாங்கள் எல்லோரும் அன்பாக சித்தப்பா என்று உங்களை அழைப்போமே. இனி யாரை அப்படி அழைப்பது. தாங்கள் மிதித்த இடத்து புல்கூட சாகாதே. அப்படிப்பட்ட உங்களுக்கேன் இந்நிலை.

கடந்த இரண்டு மாதத்துக்கு முன்னர் நீங்கள் எங்களுடைய வீட்டுக்கு வந்து சுகந்தி, பவித்திரா ஆகிய எங்களுடன் அளவளாவி கதைத்ததை நினைக்கும்போது மிகுந்த வேதனையளிக்கிறது. அளவான குடும்பம், வளமான வாழ்க்கை, முத்தான மூன்று பிள்ளைகள், மருமக்களுடன் பேரப்பிள்ளைகள் ஆகியோருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தீர்கள். இவற்றுக்கு பேரிடியாக தங்களது இழப்பு ஏற்பட்டது.

**அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**வளர்பிறை,**
**ஊரெழு கிழக்கு.**

(5802)

**ப.இராசேந்திரம் குடும்பம் மற்றும்**
**பிள்ளைகள், மருமக்கள்**

---

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF AGRICULTURE,
## ARIVIYAL NAGAR, KILINOCHCHI

Walk-in interview for the appointments to the following posts will be held on 10.10.2018 at 09.00 a.m at the Board Room of Faculty of Agriculture, AriviyalNagar, Kilinochchi.

Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in **Agronomy Animal Science/ Agriculture Biology/ Agriculture Chemistry/Agricultural Engineering/ Agricultural Economics/**

**Qualification:**

1. A Degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   **OR**
2. A Degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   **OR**
3. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least second class honours and (b) a recognized postgraduate degree in the relevant subject.

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator only.**

**Salary Scale**

| | |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 40,324 p.m (Fixed) |
| Temporary Demonstrator | Rs.33, 100 p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, **NIC and self prepared applications.**

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
21.09.2018

(C-3966)

---

# துயர் பகிர்கின்றோம்



யாழ்.வணிகர் கழகத்தின் முன்னாள்
தலைவராகவும் பொருளாளராகவும் நீண்ட
காலம் பணியாற்றி தற்பொழுது நிர்வாக சபை
உறுப்பினராக பதவி வகிக்கின்ற
திரு.இரத்தினகோபால் ஜெயராசா
(Super Shoes) அவர்களின் தாயார்

## திருமதி
## சுந்தரம்மா
## இரத்தினகோபால்

அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு
துயருற்று இருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.வணிகர் கழக**
**நண்பர்கள்**

(C-3962)

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் கப்பல் திருவிழாவில் கப்பலாட்டும் வைபவம் நேற்று புதன் கிழமை அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)









இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளையின் அனுசரணையில் மந்திகை ஆதார வைத்தியசாலை மற்றும் இரத்த வங்கி பிரிவினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் தும்பளை சைவப்பிரகாச வித்தியா சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இந் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச இளைஞர்கள் 20 பேர் கலந்து கொண்டு குருதிக்கொடையினை வழாங் கினர். (படங்கள்:-மயில்வாகனம்)







யாழ்.சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய நிறுவுநர் அமரர் மாரிமுத்து கனகசபாபதியின் திருவுருவச் சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) திருமதி ஜெ.அருள்மயம், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவன் க.மகாதேவா, பழைய மாணவர் சங்க செயலாளர் சு.சுந்தரராசா, பழைய மாணவர் சங்க பொருளாளர் சி.அருள்மயம் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(படங்கள்:-விஜயகாந்தி)


WORLD TOURISM DAY 2018
sri lanka

உலக சுற்றுலா தினக் கொண்டாட்டம் 2018
சுற்றுலா மற்றும் டிஜிட்டல் மாற்றம்

செப்டெம்பர் 26ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை
கண்காட்சி மற்றும் கலாசார நிகழ்ச்சி
இடம்: மாநகர சபை மைதானம், யாழ்ப்பாணம்

செப்டெம்பர் 27ம் திகதி
உத்தியோகபூர்வ கொண்டாட்டம்
மு.ப.9.30 மணியிலிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

செப்டெம்பர் 27ம் திகதி
டிஜிட்டல் உருமாற்றம் மற்றும் சுற்றுலா: குழு விவாதம் மற்றும் #ngage அமர்வு
பி.ப.2.00 மணியிலிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

செப்டெம்பர் 28ம் திகதி
சர்வதேச மாநாடு
மு.ப. 9.30 மணியளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது

பக்க நிகழ்வுகள்:
கட்டுரைப் போட்டி
புகைப்படம் எடுத்தல் போட்டி
காணொளிப் போட்டி

srilanka
SRI LANKA CONVENTION BUREAU
Tourism Northern Province

# யாழ்.பல்கலையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட திலீபனின் நினைவேந்தல்



இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக 12 நாட்கள் உணவொறுப்பில் ஈடுபட்டு உயிர்நீத்த திலீபனின் (இராசையா பார்த்தீபன்) 31 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று காலை யாழ். பல்கலைக்கழகத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வில் காலை 10.48 இற்குப் பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தரும், விஞ்ஞான பீடாதிபதியுமான கலாநிதி பிரின்ஸ் ஜெயதேவன் பொதுச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்த நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட கலந்து கொண்ட அனைவரும் மலர் தூவி தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

விரிவுரையாளர்கள், மாணவர்களின் நினைவுரைகள் இடம்பெற்ற அதே நேரம் தியாகி திலீபனின் அகிம்சைப் போராட்ட வரலாற்றை விளக்கும் காணொலிகளும் காட்சிப்படுத்தப்பட்டன. (7-9)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முதலாம் இலக்க கொடிகாமம் கிளையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. ஜெயவதனன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (7-30)

## உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரனும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்வி அலுவலர் ரி.மாதவனும் கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் பொது நூலக நூலகர் திருமதி ஜெ.சுதர்சன், சுன்னாகம் தெற்கு கிராம உத்தியோகத்தர் ப.சர்மிலா, சுன்னாகம் நகர மத்தி கிராம உத்தியோகத்தர் இ.எயுயீன் மசனட் ஆகியோரும் கலந்து கொள்வர்.(7)

## இரத்ததான முகாம்

Save A Life அமைப்பின் ஏற்பாட்டில் Red Cross அனுசரணையில் எதிர்வரும் 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உயிரைக்காக்கும் உன்னத பணியில் பங்கெடுக்க ஆர்வம் உள்ளவர்கள் இரத்த தான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (7-9)

## ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

திருக்குடும்ப கன்னியர் மட பாலர் பாடசாலை முன்பள்ளியின் ஆசிரியர் தின விழா எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது. (7-106)

## காலணி, கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு காலணி, கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி. குமுதினி அசோக்குமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.




இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் ராதிகா சஞ்சீவன் ஆகியோர் தமது பிறந்த நாளை முன்னிட்டு மாணவர்களுக்கு காலணி, கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தனர். (7)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

தீவகங்கள் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான அரச சேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய நடமாடும் சேவையானது அரச உயர் அதிகாரிகளின் பங்கேற்புடன் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் 4.30 மணிவரை ஊர்காவற்றுறை யா/ புனித அந்தோனியார் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பங்குபற்றி தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (7)

## இராசி பலன்

**மீனம்** — எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மேடம்** — நல்லவர்களைச் சந்தித்து நரம் காணும் நாள், வேலைச் சுமை கூடும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்.

**இடபம்** — சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சந்தேகங்கள் தோன்றி மறையும்.

**மிதுனம்** — கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.

**கும்பம்** — பொன்னான நாள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசனசுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசி பலன் கிரகநிலை | | ராகு |
| கேது, செவ் | சந்திராஷ்டமம் அத்தம் | | |
| சனி | | குரு, சுக் | சூரி, புத |

**27.09.2018**
புரட்டாதி 11, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துதியை முற்பகல் 9.17 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 3.18 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
உலக சுற்றுலா தினம்
அமிர்த சித்தம்

வளவன்

**கடகம்** — கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பணவரவு கிடைக்கும், நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

**மகரம்** — விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** — சாமர்த்தியமாகப் பேசி காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


**தனுசு** — எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், காரிய நன்மை யுண்டு.


**துலாம்** — வளர்ச்சிப் பாதைக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெருகும், கௌரவமான நாள்.

**கன்னி** — கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, போசனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

# உலக சுற்றுலா தின கண்காட்சி ஆரம்பம்















இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையும் வடமாகாண சுற்றுலா பணியகம் மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் உலக சுற்றுலா தின நிகழ்வுகள் நேற்று நண்பகல் யாழ்.மாநகரசபை மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் முதல் நிகழ்வான கண்காட்சி நிகழ்வை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இக் கண்காட்சியில் நிறுவனங்கள், அமைப்புக்கள் உள்ளிட்ட 21 காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையின் 9 மாகாணங்களைச் சார்ந்த சுற்றுலா தொடர்பான விடயங்களும் வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கண்காட்சி இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண சுற்றுலா பணியகம் அறிவித்துள்ளது. (படங்கள்:- பொ.சோபிகா)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி

**நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத் தொகுதியிலுள்ள கடைகள், மண்டான் சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2018.**

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக் கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஐப்பசி மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்காக, நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத் தொகுதியிலுள்ள கடைகளுக்கான மீள்கேள்விகள் 07/06/2018 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவா கவும், மண்டான் சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடைகளுக்கான மீள் கேள்விகள் 09/06/2018 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல், பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகவும் என்னால் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி:- 08/10/2018.
2. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :-09/10/2018 காலை 10.00 மணிவரை.
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 09/10/2018 காலை 10.30 மணி.

**நெல்லியடிச் சந்தைக் கடைகள் கேள்வி அட்டவணை**

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| UPPER FLOOR | | | | | |
| 01 | UF15 | 510000.00 | 5.100.00 | 1.000.00 | 4250.00 |
| 02 | UF 18 | 390000.00 | 3.900.00 | 1.000.00 | 3250.00 |
| 03 | UF 19 | 390000.00 | 3,900.00 | 1.000.00 | 3250.00 |
| 04 | UF 20 | 390000.00 | 3.900.00 | 1.000.00 | 3250.00 |
| 05 | UF 21 | 390000.00 | 3,900.00 | 1.000.00 | 3250.00 |
| 06 | UF 26 | 360000.00 | 3.600.00 | 1.000.00 | 3000.00 |
| 07 | UF 27 | 360000.00 | 3,600.00 | 1.000.00 | 3000.00 |

**மண்டான் சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2018.**

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி:- 08/10/2018.
2. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி:- 09/10/2018 காலை 10.00 மணிவரை.
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி:- 09/10/2018 காலை.10.30 மணி.

**மண்டான் சந்தை கடை கேள்வி அட்டவணை**

| கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 02 | 144000.00 | 1500.00 | 1.000.00 | 600.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையிடப்படல் வேண்டும். இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய காலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.
2. கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க.த.ஐங்கரன், தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி-3961)

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் கிளிநொச்சியில் நேற்று அனுஷ்டிப்பு









(கண்டாவளை)

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தன்னுயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயகமெங்கும் உணர்வுபூர்வமாக நேற்றையதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இந்திய அமைதி காக்கும் படையினரிடம் ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து காந்திய வழியில் நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து கோரிக்கைகள் நிறைவேற்றப்படா நிலையில் உறுதியுடன் உயர் துறந்தவர்.

தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் புலம் பெயர் தேசங்களிலும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நினைவுகள் எழுச்சிபூர்வமாக இடம்பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் தியாக தீபம் திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 8 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பமாகியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வு தியாக தீபம் திலீபன் உயிர் நீத்த 10.48 மணியளவில் அஞ்சலி நிகழ்வுடன் ஆரம்பமானது.

அஞ்சலி நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கமும் இடம்பெற்றது. அத்துடன் அடையாள உண்ணாவிரத நிகழ்வும் நடைபெற்றது. (2-315-312)

## வீடொன்றின் வளவினுள் முதலை



(குருமன்காடு)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீட்டிற்குள் முதலை ஒன்று புகுந்துள்ளது. இதையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. வன ஜீவராசிகள் அதிகாரிகள் வருகையிலும் தாமதம் ஏற்பட்டது. இதையடுத்து நேற்றுக் காலை முதலையை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு அருகிலுள்ள வீடொன்றின் வளவினுள் பூந்தோட்டம் குளத்திலிருந்தமுதலைஒன்றுஉணவு, தண்ணீர் தேடிச் சென்று ஒளிந்து கொண்டுள்ளது. வீட்டில் நின்ற நாயின் சத்தம் கேட்டு உரிமையாளர்வெளியே சென்று பார்வையிட்டபோது முதலை ஒளிந்து நின்றது தெரியவந்துள்ளது. இதையடுத்து அயலவர்களின் உதவியுடன் முதலையை கயிற்றினால் கட்டி வெளியே செல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மகாறம்பைக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சென்று பார்வையிட்டுள்ளதுடன் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் தகவல் வழங்கியுள்ளனர். நேற்றுக் காலை அவ்விடத்திற்குச் சென்று முதலையை அங்கிருந்து எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொளஎப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி நிலை காரணமாக குளத்திலுள்ள முதலைகள் உணவிற்கும் தண்ணீருக்கும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கிச் செல்கின்றனர். எனவே இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர். (2-250)

# நெளுக்குளம் தண்ணீர்த்தாங்கியை மக்கள் பயன்பாட்டிற்கு கையளிப்பதில் தாமதம்

## மன்னார், வவுனியா உலர் வலய சுகாதாரத்திட்ட முகாமையாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**பேராறு நீர்த்தேக்கத்திலிருந்து வவுனியா நெளுக்குளம் தண்ணீர்த்தாங்கிக்கு நீர் கொண்டு வருவதற்கு குழாய் பதித்தல் நடவடிக்கைகள் பூரணமாக நிறைவடையாது உள்ளதால் நெளுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தாங்கி மக்கள் பயன்பாட்டிற்கு கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மன்னார், வவுனியா உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரத்திட்ட முகாமையாளர் எந்திரி வே.உதயசீலன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தின் நெளுக்குளம்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தாங்கி தொடர்பாக தகவல்களை தகவல் அறியும் சட்டத்தினூடாக கேட்கப்பட்ட தகவல்களுக்கே இவ்வாறு பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையினூடாக உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரத்திட்டத்தில் அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கியின் பணிகள் பௌதீகளவில் 97 சதவீதம் நிறைவடைந்துள்ளது.

செலவழிக்கப்பட்ட நிதியின் விபரம் பொறியியல் சிட்டை அளவுகளின் படி மொத்த மதிப்பீடு ரூபாய் 294, 792.195.00 ஆகும். இதனுடன் நெளுக்குளம் நீர்த்தாங்கி அமைக்கப்படவிருக்கும் இடத்தைத் துப்புரவு செய்தல். இயந்திர உபகரணங்கள் வழங்கல் மற்றும் விநியோகித்தல். மின் உப கரணங்கள் பொருத்தல். நீர் சேமிக்கும் தாங்கி மற்றும் பாதுகாவலாளிக்கான விடுதி என்பன உள்ளடக்கப்பட்டு ள்ளன.

மேலும் இறுதிக் கொடுப்பனவுகள் முடிவடைந்த பின்னர் செலவளிக்கப்பட்ட மொத்த நிதியின் விபரங்கள் பெற முடியும்.

இவ்வளவு பணிகள் நிறைவடைந்தும் இன்றுவரையில் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கபடவில்லை. அதற்கான காரணமாக பேராறு நீர்த்தேக்கத்திலிருந்து நெளுக்குளம் தண்ணீர்த்தாங்கிக்கு நீர் கொண்டு வருவதற்கான குழாய் பதித்தல் வேலைகள் பூரணமாக நிறைவடையாது உள்ளதால் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




# வீதி விளக்குகளை பொருத்துவதற்கு 2.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு




(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் கிராமிய மின்னொளி வழங்கும் வேலைத்திட்டத்துக்காக 2.2 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார். முகாவில் பகுதியில் இடம்பெற்ற பொது அமைப்புகளுடனான கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு கிராம மட்ட அமைப்புக்கள் தவிசாளரிடம் கூறுகையில், சபை அமைக்கப்பட்டு ஆறு மாதங்களாகிவிட்டது. எமது கிராமத்துக்கு வீதி விளக்குகள் எதுவும் பொருத்தப்படவில்லை. இதனால் இரவு நேரங்களில் விபத்துக்கள் மற்றும் களவு, கலாசார சீரழிவுகள் இடம்பெறுகின்றன என தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலமும் பிரதேச சபையின் நிதிமூலமும் சேர்த்து இம்முறை 2.2 மில்லியன் ரூபாய்களை கிரமிய மின் வெளிச்சம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருட இறுதிக்குள் குறித்த பிரச்சினைகளுக்கு ஓரளவுக்கு தீர்வு எட்டப்படும் எனவும் தெரிவித்தார்.இங்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான அருள் செல்வி.ரமேஷ், வீரவாகு தேவர் மற்றும் கிராம அலு வலர் காண்டீபன் மற்றும் பொது அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்தனர். (2-315)

# தியாகி திலீபனின் நினைவேந்தல்
# மன்னாரில் இரு இடங்களில்




(மன்னார்)

தியாக தீபம் திலீபனின் 31 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மன்னாரில் இரு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் நகர மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நினைவேந்தல் இடம் பெற்றது.

முற்பகல் 10.48 மணியளவில் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு ஈகச் சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் சர்வமதத்தலைவர்கள், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா,சட்டத்தரணி பா.டெனிஸ்வரன்,மன்னார் நகர முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ரெட்ணசிங்கம் குமரேஷ் மற்றும் நகர சபை உறுப்பினர்மைக்கல்கோலின் ஏனைய நகர,பிரதேச சபை உறுப்பினர்கள்,பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையிலும் முற்பகல் 10. 48 மணியளவில் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகத்தில் நினைவேந்தல் நடை பெற்றுள்ளது.

இதன் போது திலீபனின் உருவப்படத்திற்கு ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த உணர்வு பூர்வமான நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார்,மதத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (2)

## ஆயுள்வேத வைத்தியசாலை; மதிப்பீட்டு வேலைகள் பூர்த்தி

### கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பகுதியில் இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட கண்டாவளை உப அலுவலகத்தின் கீழுள்ள தருமபுரம் பகுதியில் ஆயுள்வேத வைத்தியசாலையொன்றை அமைக்குமாறு நீண்ட காலமாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த பிரதேசத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் . தருமபுரம் பகுதியில் பிரதேச சபையின் நிதியில் இருந்து இரண்டு மில்லியன் ரூபா செலவில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது. தற்போது இதற்கான மதிப்பீட்டு வேலைகள்நிறைவுபெற்றுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தியாகி திலீபனுக்கு மலர்தூவி அஞ்சலி





(பரந்தன்)

தியாக தீபம் திலீபனின் 31 ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆனந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது தியாகி திலீபனுக்கு ஈகச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. குறித்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (2-312)

## 'வரலாறும் பண்பாடும்' நூல் வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மற்றும் நாச்சிக்குடா ஜும்ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் நிர்வாக சபையும் இணைந்து நடத்தும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்கள் பற்றிய வரலாறும், பண்பாடும் ஆய்வு நூல் வெளியீட்டு விழா நாச்சிக்குடா ஜும்ஆ மஸ்ஜித் பள்ளிவாசலில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முஸ்லிம் சமயம் பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம்கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக கைத்தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன், வடக்கு அபிவிருத்தி மற்றும் மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் ராமநாதன், முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ. ஆர். எம். மலீக், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பல பிரமுகர்களுடன் சிறப்பு விருந்தினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-9)

## மண் பரிசோதனை ஆய்வுகூடம் வவுனியாவில் திறந்துவைப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் மண் பரிசோதனை ஆய்வுகூடம் திறந்து வைப்பக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நலன்களைக் கருத்திற்கொண்டு மண் பரிசோதனை ஆய்வு கூட நிலையமொன்று நேற்று முன்தினம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா பூங்கா வீதியில் அமைக்கப்பட்ட மண் பரிசோதனை ஆய்வு கூடத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

விவசாயிகள் தமது விவசாய நிலங்களில் தேவையற்ற பசளை வகைகளை பயன்படுத்தாது மண்ணின் தன்மையை மாற்றியமைக்காது இருப்பதற்கும், விவசாய நிலத்திற்கு தேவையான பசளையை கண்டறிந்து அதனை பயிருக்கு பயன்படுத்தி அதிகளவான விளைச்சலை ஏற்படுத்து வதற்கு வசதியாகவும் மண் பரிசோதனை ஆய்வு கூடம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான எம். தியாகராசா, ஆர். இந்திரராசா, நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## குரங்குகளை விரட்டுவதற்கு விவசாயிகளுக்கு துப்பாக்கிகள்

(குருமன்காடு)

வவுனியாவில் அதிகரித்துள்ள குரங்குத்தொல்லைகளைக் கட்டுப்படுத்த அங்குள்ள விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. குறித்த நிகழ்வு வவுனியா விவசாய் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

குறித்த பகுதிகளில் குரங்குகளினால் ஏற்படும் பாதிப்பு தொடர்பாக அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைமுன்வைத்துவந்துள்ளனர்.

இந்நிலையில் அதற்கு தீர்வை வழங்கும் வகையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் துப்பாக்கிகளை வழங்கி வைத்துள்ளார்.

இதன்போது குரங்கு களை கலைக்கக்கூடிய வகையிலான துப்பாக்கிகளையே விவசாய இளைஞர் கழகத்தின் பிரதிநிதிகளிடம்அவர் கையளித்துள்ளார்.

குரங்குகளிடமிருந்து மக்களின் பயிர்ச்செய்கை களை பாதுகாப்பதற்காகவே அவர்களுக்கு துப்பாக்கி களை வழங்கினோம் என அவர் இதன் போது தெரிவித்தார்.(2-250)

# கலைத்தரிசனம்





## கலாபூஷணம்
# சின்னத்தம்பி கனகராசா
## அவர்களுடனான சந்திப்பு

யாழ்.தென்மராட்சி வரணி வடக்கு சிமிழ் அம்மன் வீதியைச் சேர்ந்த கலாபூஷணம் சி.கனராசா தற்போது வைத்தியசாலை வீதி கண்டாவளையில் வசித்து வருகிறார். 1951 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி சின்னத்தம்பி சின்னமணி தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்த இவர் பிரபல ஆர்மோனிய இசைக்கலைஞரான வளலாய் பிலிப்பையாவைக் குருவாகக் கொண்டு ஆர்மோனிய வாத்திய இசையை முறையாகக் கற்றுக் கொண்டார். ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஆர்மோனிய இசைக் கலைஞராகத் திகழ்கிறார். மரபுவழி இசை நாடகங்கங்கள், வில்லுப்பாட்டு, கிராமிய நிகழ்ச்சிகளுக்கான இசை வழங்குவதில் சிறப்பாற்றலைக் கொண்டுள்ளார். அரச விருதான கலாபூஷணம், கிளிநொச்சி மாவட்டக் கலாசாரப்பேரவை விருதான கலைக்கிளி, கண்டாவளைப் பிரதேசச் செயலக விருதான கலைஒளிர் போன்ற விருதுகளைப் பெற்றார். கலாபூஷணம் சி.கனகராசா தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.

◆ இசைத்துறைக்குள்ளான உங்கள் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்?

நான் சிறுவனாக இருந்த காலத்தில் எங்கள் கிராமத்தில் கூத்துகள், நாடகங்கள் என்பன ஆடப்பட்டு வந்தன. அத்துடன் கிராமிய நிகழ்ச்சிகளான காவடி, கரகம் என்பனவும் நிகழ்த்தப்பட்டு வந்தன. எங்கள் கிராமத்தில் பிரசித்திபெற்ற கோவில்களான சிட்டிபுரம் அம்மன் கோவில் , சிமிழ் அம்மன் கோவில் போன்றன இருந்தன. இந்தக் கோவில்களில் திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுவது வழமை. இந்தத் திருவிழாக் காலங்களில் அதிகமான கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்தக் கலை நிகழ்வுகளில் இசைக்கு முக்கிய இடம் இருக்கும். காவடியோ, நாடகமோ, கூத்தோ, கரகமோ, வில்லுப்பாட்டோ, பஜனை நிகழ்வோ எப்பாடியான நிகழ்வாக இருந்தாலும் இசை முக்கிய இடம் பிடித்திருக்கும். அந்த நிகழ்வுகளைப் பார்க்கச் செல்லும் வேளைகளிளெல்லாம் ஆர்மோனிய இசையை நான் நன்றாக இரசிக்கத் தொடங்கினேன்.

வேறு வேறு ஆட்கள் வந்து இந்த ஆர்மோனியத்தை இசைக்கும் போதெல்லாம் அவர்களின் வாசிப்புத் திறன்களை நான் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அத்துடன் உடுக்கு, தபேலா, மிருதங்கம் இவற்றையும் என்னுள் உள்வாங்கிக் கொண்டேன்.

அப்போதெல்லாம் இந்த இசைக் கருவியை எப்போது நரீன் வாசிப் பேன் என்ற அவா என்னுள் எழுந்தது. இத ற்கு ஏற்றாற்போல எங்கள் ஊரின் அம்மன் நாடக மன்றத்தினரால் பல்வேறு கூத்துக்கள், நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. அந்த நாடகங்களிலே எங்கள் உறவினர்களே நடித்திருந்தார்கள். நாடகங்கள் பெரும்பாலும் எங்கள் வீட்டிலேயே ஒத்திகை பார்க்கப்படுவதுண்டு. அப்போது அந்த ஒத்திகை வேளைகளில் வாத்தியக்கருவிகள் இசைக்கப்படுவதுண்டு. ஒருமுறை அரிச்சந்திரா மயான காண்டம் இசை நாடகம் எங்கள் வீட்டில் ஒத்திகை பார்க்கப்பட்டது. அதில் அரிச்சந்திரனாக எனது தந்தையார் நடிக்க சந்திரமதியாக எனது மாமனார் இராசையா நடித்திருந்தார். எங்கள் உறவுக்காரர்களே ஏனைய பாத்திரங்களிலும் நடித்தனர். அப்போது ஒத்திகைக்காக நடிகமணி வி.வி. வைரமுத்து வந்திருந்தார். அவருடன் ஏனைய வாத்தியக்காரர்களும் இணைந்து ஒத்திகை பார்ப்பார்கள்.

அப்போதெல்லாம் ஆர்மோனிய இசையை நான் கவனமாகக் கேட்டு அப்போதே வாசிக்கத் தொடங்கிவிட்டேன். இன்னும். அல்வாய் தெற்கைச் சேர்ந்த தம்பிஐயா எங்கள் நாடக மன்றத்தின் இயக்குநராக இருந்து அரிச்சந்திரா மயான காண்டத்தை நெறிப்படுத்தியிருந்தார். இவர்களோடு அல்வாய் தெற்கைச் சேர்ந்த பொன்னையாவும் (மாஸ்ரர்) ஆர் மோனியம் இசைக்க வருவதுண்டு. ஒத்திகை எப்போதுமே இரவில் நீண்டநேரம் வரை நடைபெறும். இதனைப் பார்த்தபோதெல்லாம் இந்த ஆர்மோனியத்தை வாசிக்க வேண்டும் என்ற ஆவல் என்னுள் பூத்தது.

தொடர்ந்து பாடசாலைக் காலங்களிலும் சரஸ்வதிப்பூசை மற்றும் விழா நிகழ்வுகளிலும் எனக்குத் தெரிந்த அளவில் ஆர்மோனியத்தை இசைத்து வந்தேன். எனது ஆர்வத்தை உணர்ந்த எனது தந்தையார், அன்றைய நாட்களில் ஆர்மோனிய வாத்தியத்தில் மிகப் பிரபலம் பெற்றவர்களில் ஒருவரான அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த பிலிப்பையாவிடம் ஆர்மோனியத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். வாரத்தில் இரு நாட்கள் சென்று ஆர்மோனியப் பயிற்சியைப் பெற்று வந்தேன். நல்ல முறையிலே விடயங்களைச் சொல்லித் தருவார். பிலிப்பையாவுடன் அவரது மகன் யோண்கவாஸும் எனக்கு இசையைக் கற்பித்ததார்கள்.

பின்னர் கூத்துகள், இசை நாடகங்கள், சமூக நாடகங்கள் கலை நிகழ்வுகள் என்று வாசிக்கத் தொடங்கினேன்.

◆ நீங்கள் சந்தித்த பிரபல கூத்துக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள் தொடர்பாகக் கூறுங்கள்?

நான் சிறுவனாக இருந்த காலங்களில் இசை நாடகக் கலைஞர்களான அல்வாய் தெற்கு தம்பிஐயா, வதிரி அண்ணாசாமி வாத்தியார் ஆகியோரின் நடிப்பு, பாட்டு, நெறியாள்கை என்பவற்றால் ஈர்க்கப்பட்டேன். அவர்களின் கலைச்சேவை என்னைப் பிரமிக்க வைத்தது. எனது தந்தையாரோடு அவர்கள் நெருக்கமாகப் பழகிய வேளைகளில் எல்லாம் அவர்களின் திறனை அறியக்கூடியதாக இருந்தது. மேலும் நடிகமணி வி.வி. வைரமுத்து எங்கள் நாடக மன்றத்திற்கு வந்து பயிற்சி வழங்கியபோது அவரிடமிருந்து ஆர்மோனிய வாத்திய இசையை வாசிக்கும் நுணுக்கங்களை அறியக்கூடியதாக இருந்தது. அத்துடன் அவரின் பாட்டும் நடிப்பும் எல்லோரையுமே கவர்ந்தவையாகவே இருந்தன. இன்றும் விசுவமடு, கண்ணகி நகர், அண்ணாவியார்களான வேலாயுதபிள்ளை, பாலசுப்பிரமணியம், சிவானந்தம், கண்டாவளை அண்ணாவி புண்ணியராசா, காசி மணியம், வரணி செல்வராசா இவர்கள் எல்லோருமே இந்தக்கலையுலகிற்குக் கிடைத்த பொக்கிசங்கள் என்றே கூறவேண்டும்.

இன்னும் நடிகமணி வ.செல்வரட்ணம், கலாபூஷணம் தைரியநாதன் ஆகியோரும் கலையுலகில் இசை நாடகத்தில் நான் சந்தித்த பிரபலங்கள்.

இசைக்கலைஞர்கள் என்கின்ற வகையில் சாந்தன் இசைக்குழுவின் எஸ்.சாந்தன், ஜே.சுகுமார், புதுக்குடியிருப்பு ஓகன் இசையாசிரியர் பிரசாத், ஓகன் வாத்தியக் கலைஞர் தேவகுமார், சிவராம், உரும்பிராய் குமணன் இவர்களோடு அல்வாயூர் விவேகானந்தன், பொன்னையா மாஸ்டர், வளலாய், பிலிப்பையா, இவரது மகன் யோண்கவாஸ் போன்றோரையும் வரணி காசிநாதர் குழுவினர், கண்டாவளை காசிமணியம் குழுவினரையும் கூறுவதில் நிறைவு கொள்கிறேன்.

◆ அன்றைய, இன்றைய சங்கீத அளிக்கைகளின் வேறுபாடுகள்?

நாடகங்கள், கூத்துக்கள், இசை நாடகங்கள் என்பவற்றில் கதை, நடிப்பு, ஒப்பனை போன்றவற்றோடு இசை என்பதும் முக்கிய இடம் வகிப்பதை இலேசில் விளங்கிக்கொள்ளலாம். ஒரு சோகக் காட்சியின் போது காட்சி எப்படி அமைந்தாலும் அந்த வேளைக்கான இசையை பின்னணியில் ஒலிக்கும் போது தான் அந்தக்காட்சியானது முழுமையடைவதைக் காண முடியும். இசை அப்படியே சுவைஞர்களை ஆகர்ஷித்துக் கொள்வதை உணர முடியும். ஒரு கர்ப்பிணிப்பெண் பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருக்கும்பொழுது காற்றடித்து, இடி முழங்கி, மின்னலடித்து மழை பொழிகிறது. வீடு உடைந்து விடுகிறது என்று காட்சி ஒன்று இருக்குமானால் அதைத் தத்ரூபமாக வெளிக்கொணர இசையால் முடியும். அன்றைய நாட்களில் காற்றடிக்கும் காட்சியைக் காட்டுவதானால் தட்டிச் சீன்களின் அருகில் நின்று இருவர் தென்னோலைகளைப் பிடித்து வேகமாக அசைப்பதும் இறுதியில் அவ் ஓலைகளை மேடையிலே வேகமாக எறிவதும் சிறு சிறு குழைக்கொம்புகளை வீசுவதுமாகக் காட்டுவார்கள். மின்னல் என்றால் சக்திகூடிய மின்குமிழ்களை அணைத்து ஏற்றுவார்கள். இடி முழக்கம் என்றால் மெல்லிய தகரங்களை வேகமாக விசிறுவதன் மூலம் காட்டுவார்கள். இதற்கெல்லாம் மூலவாத்தியமாக ஆர்மோனியம், மிருதங்கம் என்பன மட்டுமே இசைக்கப்பட்டன. இன்னும் ஒலிவாங்கிகள் கூட இப்போது உள்ளது போல் அப்போது இல்லை. இரண்டு கிறம்பியன் வகை ஒலிவாங்கிகளை மேடையிலே தொங்க விடுவார்கள். அவற்றை உயர்த்திப் பிடிக்கும் வசதிகள் மட்டும் இருந்தன. படுத்துக் கிடந்து பேசுவதற்கும் நின்று கொண்டு பேசுவதற்கும் ஏற்றாற்போல உயர்த்திப் பதிக்க முடியும். ஆனால் ஒரு நடிகன் அந்த ஒலி வாங்கியைச் சுற்றியே தன் நடிப்பாற்றலைக் காட்ட வேண்டியிருந்தது. ஆனால் இப்போது அப்படியில்லை. நவீன வசதிகள் கொண்ட ஒலிவாங்கிகள் வந்துவிட்டன. நடிகர்களுக்கு தனித்தனி ஒலிவாங்கிகள் சொருகப்படும் வசதிகள் உள்ளதால் தெளிவாக கலைஞர்களுக்கு கேட்கும் வகையில் நாடக அளிக்கைகள் செய்யப்படுகின்றன. இன்னும் ஓகன் என்னும் வாத்தியக் கருவியில் எந்த எந்த ஒலி எந்த எந்த இடங்களில் தேவைப்படுகிறதோ அந்த அந்த இடங்களில் துல்லியமாக இசைக்க வைக்க முடியும்.

◆ இந்த இசைத்துறை சார்ந்த உங்கள் சேவைக்காலத்தில் ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் கூறுவீர்களா?

எனது தந்தையாரும் அவரது குழுவினரும் அரிச்சந்திர மயான காண்டம் இசை நாடகத்தை பழகிக் கொண்டிருந்த காலம். தந்தையார் அரிச்சந்திரனாகவும் அவரது மச்சான் இராசையா சந்திரமதியாகவும் உறவுக்காரர்கள் ஏனைய பாத்திரங்களிலும் நடித்து ஒத்திகை மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாடகம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பாக வரும் என்ற எண்ணப்பாட்டை ஒத்திகைகள் தோற்றுவித்துக் கொண்டிருந்தன. பிரபல நடிகர்கள் தம்பிஐயா மற்றும் பாலகுமார் நெறியாள்கையில் ஈடுபட்டனர். நடிகமணி வி.வி. வைரமுத்து ஆர்மோனியத்தை இசைத்து வந்தார்.

அம்மன் கோயில் வீதியிலே இரவு-பகலாக மேடை அமைக்கப்பட்டது. இனி நாடகம் அரங்கேற்றுவதுதான் என்று ஆவலோடு இருக்கையிலே எனது தந்தையார் திரைச் சேலைகள் (சீன்) மற்றும் காட்சிப் பொருட்களை ஒழுங்கமைத்துவிட்டு இரவுநேரம் வீட்டுக்கு வருகை தந்து கொண்டிருந்தார். மிதிவண்டியில் வந்தவர் வீட்டுப் படலையடியில் இறங்கியபோது பாம்பு ஒன்று அவரைத் தீண்டிவிட்டது. உடனடியாக வைத்தியரிடம் கொண்டு சேர்ப்பித்து அவருக்கான சிகிச்சையளிக்கப்பட்டது. ஆனாலும் அவர் மயக்க நிலையிலேயேதான் இருந்தார். நாடக அரங்கேற்றத்துக்கு இன்னும் மூன்று நாட்களே உள்ளன. இந்த "விடம் கலைத்தது" என்னவாகுமோ... ஏது ஆகுமோ... என்று எல்லோரும் ஏங்கிக் கொண்டிருந்த வேளை அவருக்கான சிகிச்சை தொடர்ந்து வழங்கப்பட்டது. இரண்டாம் நாள் கண் திறந்து பார்த்தவர் மெதுமெதுவாகக் குணமடைந்து வந்தார். பெருமளவு எதிர்பார்ப்போடு விளம்பரப் பதாகைகள் தொங்க விடப்பட்டு இருந்த நாடகம் நடக்குமா? என்ற கேள்விக்குறிக்கு தந்தையார் சம்மதம் தெரிவித்தார். ஆனால் அவரால் உச்சஸ்தாயியில் பாடல்களை பாட முடியாமற் போய்விட்டது. களநிலையைப் புரிந்துகொண்ட நடிகமணி வி.வி. வைரமுத்து அரிச்சந்திரனுக்குரிய பாடல்களைப் பாட எனது தந்தையார் நாடக வசனங்களைப் பேசி நடித்திருந்தார்கள். நாடகம் சிறப்பாக நடைபெற்றாலும் முழுமையாகப் பாடி நடிக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எனது தந்தையார் மனதில் இருந்தது.

◆ தற்போதைய இசைக்கலைஞர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

இசை உலக ஜீவராசிகளுக்கு சுகமளிக்கின்ற ஓர் அற்புதமான் விடயம் இசையானது என்றும் இருக்கும். இசை தொடர்பாக நாளுக்கு நாள் புதுப்புது விடயங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

இசையானது எல்லோரா லும் நேசிக்கப்படும் விடயமாகக் காணப்படுகிறது. வாழ்வில் இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்திருக்கிறது. இந்த இசைத் துறையை சிறப்பாக வளர்க்க வேண்டியது மனிதர்கள் ஒவ்வொருவருடைய கடமையாகின்றது.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# முதலாவது பாராளுமன்றத் தேர்தலின் பின் நடந்த அரசியல் மாற்றங்களும் தமிழர் பிரச்சினையும் 02



கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

**இணையத்திலிருந்து பெறப்பட்ட தகவலின் படி வாக்களித்தோர் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.**

THE VOTING ON THE INDIAN AND PAKISTAN RESIDENTS (CITIZENSHIP) ACT

AYES 52

| | | |
|---|---|---|
| Hon. Mr. D.S. Senanayake | C.E. Attygalle | J.W.Oldfield |
| Hon. Mr.S.W.R.D. Bandaranaike | Ivan T. Dasanaike | S.A. Pakeman, |
| | G.A. de. Zoysa | |
| Hon. Mr. A.E. Goonesinha | Mudaliyar M.M. Ebrahim | T.B. Panabokke |
| Hon. Mr. T.B. Jayah | S.W. Ethirimana-singham | Albert F. Peiris |
| Hon. Mr. J.R. Jayewardene | J.J. Fernando | T.B. Poholiyadde Dissawa |
| Hon. Mr. E.A. Nugawela | F.H. Griffith | H.R.U. Premachandra |
| Hon. Mr. G.G. Ponnambalam | D.S. Goonesekera | T. Ramalingam |
| Hon. Mr. A. Ratnayake | Mudaliyar D.P. Jayasuriya | J.A. Rambukpota |
| Hon. Mr. Dudley Senanayake | T.F. Jayewardene | V.G.W. Ratnayake |
| M.D. Banda | Major Montague Jayawickrema | H.L. Ratwatte |
| P.B. Nankulama Dissawa | D.D. Karunaratne | M. Senanayake |
| G.R. de Silva | N.H. Keerthiratne | A. Sinnalegga |
| H.S. Ismail | S.H. Mahadiulwewa | E.E. Spencer |
| A.P. Jayasooriya | J. Aubrey Martensz | K.V.D. Sugathadasa |
| K. Kangaratnam | H.de Z. Siriwardena | H.B. Tenne |
| Mudaliyar M.S. Kariapper | | A.L. Thambiaya |
| V. Nalliah | | V.T.Nanayakkara |
| E.W. Mathew | | |
| H. W. Amarasuriya | | |

NOES 32

| | | |
|---|---|---|
| H.D. Abeygoonewardena | J.C.T. Kotalawala | D. Ramanujam |
| Somaweera Chandrasiri | P. Kumarasiri | Florence Senanayake |
| S.J.V. Chelvanayakam | K. Kumaravelu | S.A. Silva |
| W. Dahanayake | G.R. Motha | S. Sivapalan |
| Colvin R. de Silva | M.H. Peiris | T.B. Subasinghe |
| P.H.W. de Silva | R.S. Pelpola | S.M. Subbiah |
| Cholmondeley Goonewardene | A. Reginald Perera | S. Thondaman |
| | N.M. Perera | C. Vanniasingam |
| P.B.R. Gunawardena | Wilmot A. Perera | S.V. Velupillai |
| Kusumsiri Gunawardena | K. Rajalingam | W.P.A. Wickremasinghe |
| D.F. Hettiarachchi | L. Rajapaksa | I.M.R.A. Iriyagolla |

இச் சட்டத்தின்படி இருந்த நிபந்தனைகளையும் (இலங்கையில் வாழ்ந்த காலம் மற்றும் பணவசதி) இந்தியத் தமிழர்களால் நிறைவேற்ற முடியவில்லை. காரணம் அவர்கள் பணவசதி படைத்தவர்களல்ல. மற்றையது அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை சொந்தபந்தங்களைப் பார்க்க இந்தியா சென்று வருபவர்கள். இச்சட்டம் இயற்றப்பட்டு அடைப்புக்குறிக்குள்ளே "பிரஜாவுரிமை" என்று குறிப்பிடப்பட்டது. இச் சட்டத்தின்படி நாட்டின் குடிகளாகவன்றி (Citizen), குடியிருப்பாளராக (Resident) இம் மக்கள் கணிக்கப்பட்டனர்.

### 1949ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க இலங்கை பாராளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம்

இதேவருடம் 1949 ஆம்ஆண்டு மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் நோக்குடன் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கு ஒரு திருத்தத்தினை கொண்டுவந்தார். இச்சட்டத்தால் குடியுரிமையை இழந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் உரிமையும் மறுக்கப்பட்டது. அவரது அமைச்சரவையில் பதவியில் இருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அந்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தார்.

மலையக மக்கள் இலங்கையை தமது சொந்த நாடாக கருதி வாழ்ந்து வந்திருந்தனர். 1946 இல் சோல்பரி குழுவினர் 80 வீதமான மலையக மக்கள் இலங்கையை தமது சொந்த நாடாக கருதி வாழ ஆரம்பித்து விட்டனர் என்று அறிக்கையிட்டிருந்த நிலையிலேயே இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மலையக மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

### நேரு- கொத்தலாவல ஒப்பந்தம் (1954)

1954 ஆம் ஆண்டில் கையெழுத்தான நேரு- கொத்தலாவல ஒப்பந்தம் குடியுரிமையைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அதிகம் பயன்படவில்லை. இவ்வொப்பந்தத்தின் சாராம்சம் :- இந்திய-பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தின்படி பிரஜைகளாகப் பதிவு செய்தல் 2 வருட காலத்தினுள் பூர்த்தியாக்கப்படுதல் வேண்டும், 10 வருடங்களுக்கு தனியானதொரு வாக்காளர் இடாப்பு இருத்தல் வேண்டும், இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்படாதவர்கள் இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கும்படி தூண்டப்படல் வேண்டும் என்பனவாகும்.

இலங்கைக் குடியுரிமைக்குத் தகுதியற்றவர்கள் எல்லோரையும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியக் குடியுரிமை கோருபவர்களை மட்டுமே ஏற்றுக்கொள்ள இந்தியா சம்மதித்தது. நாடற்றவர்களில் பெரும்பாலானோர் இலங்கையிலேயே வாழ விரும்பியதால் இப்பிரச்சினை தீராமலேயே இருந்தது. இதன் பின்னணியில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது.



நேரு- ஜோன் கொத்தலாவல

### சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் (1964)

1964ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி உருவாக்கப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி 525,000 பேர் இந்தியாவுக்குச் செல்ல வேண்டுமெனவும் 300,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படுமெனவும் மிகுதி 150,000 பேர் பிறகு யோசிக்கப்படுவார்கள் என்ற சட்டம் ஒப்பந்தமாக உருவாகியது. அன்று 975,000 பேர் இந்திய வம்சாவளி மக்களின் குடிசனத் தொகை என்று கணக்கிட்டிருந்தார்கள். 1967ஆம் ஆண்டில் 14ஆம் இலக்க இலங்கை-இந்திய உடன்படிக்கை அமுல்படுத்தும் சட்டம் உருவாகியது. 1967 முதல் அமுலாகத் தொடங்கிய சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் அம்மக்களை இந்தியக் குடியுரிமை பெறுவோர், இல



சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்

ங்கை குடியுரிமை பெறுவோர், நாடற்றவர்கள் என மூன்று கூறாக பிரித்தது.

இச் சட்டத்திற்கிணங்க 4 இலட்சம் பேர் இந்தியாவுக்கு விண்ணப்பித்தனர். 1971ஆம் ஆண்டில் 43ஆம் இலக்க இலங்கை-இந்திய அமுல்படுத்தும் ஒப்பந்தத் திருத்தச் சட்டப்படி 7 பேர் இந்தியா செல்லும் போது 4 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படும் என்ற சட்டம் செயற்பட்டது. 1974 முதல் சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தப்படி மீதப்பட்ட 150,000 பேரில் 75,000 பேர் இந்தியாவுக்கும் 75,000 பேர் இலங்கைக்கும் பதிவாக்கப்படும் என சட்டம் பிறப்பித்தது. 1982 இல், 86,000 விண்ணப்பங்கள் இந்திய உயர்தானிகரகத்தில் முடிவு எதுவும் இன்றியும், இந்தியக் கடவுச்சீட்டு வழங்கியோரில் 90,000 பேர் இன்னும் இலங்கையில் தங்கியிருந்த நிலையிலும், நிறைவேற்றுக்காலம் கழிந்துவிட்டதால், இவ்வொப்பந்தங்கள் இனிச் செல்லுபடியாகாது என இந்தியா அறிவித்தது.

இந்தச் சட்டங்களுக்குப் பின்னர் 1988 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்கச் சத்தியக் கடதாசி மூலம் பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 2003 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டமும் உருவாகியது. பின்னர் 2009ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமும் 2009 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு விசேடத் திருத்தச் சட்டமும் என பிரஜாவுரிமை சட்டங்கள் முற்றுப் பெற்றன.

### இலங்கையில் ஆரம்ப காலத்தில் இடதுசாரி தலைவர்களினது சிந்தனைகளும் பின்னர் அதில் ஏற்பட்ட தளம்பல்களும்

1950இல் இரு இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும் (LSSP) பொல்செவிக் லெனினிஸ்ட் கட்சியும் (BLP) ஒன்று சேர்ந்து லங்கா சமசமாஜக்கட்சி என இயங்கியது. இவ்வாறு ஒன்று சேர்வதை விரும்பாத லங்கா சமசமாஜக்கட்சியின் ஆரம்ப அங்கத்தவரான பிலிப் குணவர்த்தன லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து வேறு சிலரோடு பிரிந்து சென்று விப்லவக்காரி லங்கா சமசமாஜக் கட்சியென்ற (VLSSP) புதிய கட்சியை ஆரம்பித்தார்.

இவ்வாறு இடதுசாரிக் கட்சிகள் சித்தாந்த வேறுபாடுகள், முரண்பாடுகள், தலைமைத்துவ போட்டிகள் போன்ற காரணங்களினால் பலவீனமடைந்து காணப்பட்டதால் பலமான எதிர்க்கட்சியாகச் செயற்பட முடியவில்லை. பலமான ஓர் எதிர்க்கட்சி இல்லாத காரணத்தினால் தமிழர்களுக்கு எதிரான சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது இலகுவாக இருந்ததாக கூறப்படுகின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் வி.காராளசிங்கம், ஏ.வைத்திலிங்கம், நாகலிங்கம், பி. கந்தையா, என். சண்முகதாசன், வி. பொன்னம்பலம் போன்ற பெயர் பெற்ற இடதுசாரித் தலைவர்கள் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இடதுசாரி அரசியல் (Left wing politics) என்பது சமூக சமத்துவத்தை ஆதரிக்கும் அரசியல் நிலைப்பாடாகும். ஒடுக்கப்படும் மக்களின் நலன்களை கவனிக்க, ஒடுக்கங்களை ஒடுக்க நினைக்கும் ஒவ்வொருவரும் இடதுசாரிகளே. இந்த இடது வலது அரசியல் பிரெஞ்சு புரட்சியில் ஆரம்பித்தது.

அக்காலத்திய (19ஆம் நூற்றாண்டில்) பிரெஞ்சு அரசியல் அவையில், முடியாட்சி அதாவது ஏகாதிபத்தியத்தை ஆதரித்தவர்கள் வலது பக்க இருக்கைகளிலும், அதை எதிர்த்துப் புரட்சியை ஆதரித்ததுடன், குடியரசு உருவாக்கப்படுவதை ஆதரித்தவர்கள் இடது பக்க இருக்கைகளிலும் அமர்ந்து இருந்தனர். அரசியலில் இடது, வலது என்ற பயன்பாடுகள் உருவானதற்கான காரணமாக இதுவே அமைந்தது.

**இடதுசாரித் தலைவர்கள்**



டாக்டர் என்.எம்.பேரேரா



டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா



பிலிப் குணவர்த்தன

# பாரதம்

## இமாச்சல பிரதேசத்தில் கனமழை 30 பேர் உயிரிழப்பு!



(இமாச்சல பிரதேசம்)

இமாச்சல பிரதேசத்தில் தொடரும் கனமழை மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளில் சிக்கி, இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

அங்குள்ள பெரும்பாலான இடங்களில் வெள்ள நீர் புகுந்துள்ளமையால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இமாச்சல பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிப்படைந்துள்ளது.

அங்குள்ள பெரும்பாலான இடங்களில் 3 அடிக்கும் மேல் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், சில இடங்களில் கடுமையான நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இதனால், இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காணாமற்போயுள்ளதாக அந்த மாநிலத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதனால், அங்கு வருகைதந்துள்ள ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் திரும்பிச் செல்ல இயலாத வகையில், மணாலியில் சிக்கியுள்ளனர் என்றும் இவர்களை மீட்க மாநில அரசாங்கம் சார்பில் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

## ஈழப்படுகொலைக்கு இந்தியா முழுப்பொறுப்பு

### செந்தமிழன் சீமான் இடித்துரைப்பு








(சென்னை)

ஈழத்தமிழர்கள் படுகொலைக்கு காங்கிரஸ் தி.மு.கவே காரணம் என்று, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழீழம் கிடைக்க போராடி உயிர் நீத்த தியாகி திலீபனுக்கு, நாம் தமிழர் கட்சி சார்பில், நேற்றைய தினம் புதன் கிழமை வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், குறித்த அஞ்சலி நிகழ்வை தொடர்ந்து ஊடகங்களிடம் பேசிய சீமான் மேற்படி கூறியுள்ளார்.

இதன்போது மேலும் கூறிய அவர்,

"இலங்கை படுகொலை இடம்பெற்ற போது, அப்போதைய ஆட்சியில் இருந்த காங்கிரஸ் மற்றும் கூட்டணியாக இருந்த தி.மு.கவே காரணம் என்பது சிறுபிள்ளைகளுக்கும் தெரியும்.

அத்தோடு அந்த ஆட்சியில் பெரும்பான்மையுடன் சட்டசபையிலிருந்த ஜெயலலிதா கூட, இது தொடர்பில் எந்த எதிர்ப்பும் வெளியிடவில்லை.

ஈழயுத்தமே இந்தியாவின் முழு ஆதரவுடன் தான் இடம்பெற்றது என்பதை, மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தனர்.

இசைப்பிரியா கைது செய்யப்பட்டது, பாலச்சந்திரன் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை என, எல்லாமே இந்தியாவிற்கு தெரியும்.


எனவே பிரபாகரன் குடும்பத்தில் ஒருவரும் உயிரோடு இருக்கக்கூடாது எனக் கூறியது யார் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அந்த நேரத்தில் தனித்து குரல் கொடுத்த நான் அடிக்கடி சிறை சென்று வந்தேன்.

எல்லாவற்றையும் மனதில் தேக்கி வைத்திருக்கும் போது அடக்கமுடியாத கோபம் வரும், அதற்கு ஒரு காலம் வரும், அப்போது நீ நினைத்ததை செய் என ஹிட்லர் கூறியதை போன்றே நமது நிலையும் உள்ளது.

மேலும் நாங்கள் போரின் ஒவ்வொரு அமர்வையும், இந்தியத் தலைவர்களிடம் சொல்லியே நடத்தினோம் என, அந்நாட்டின் ராணுவ அமைச்சராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தோடு அந்தக் காலத்தில் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு விஜயம் செய்து விரைவில் போரை நடத்தி முடிக்கவே கூறினார்" என சீமான் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## தன்சானியா ... உயிரிழப்பு 22...



(உகாரா)

தன்சானியா நாட்டின் விக்டோரியா ஏரியில் சென்ற படகு தண்ணீரில் மூழ்கி கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 225 ஆக அதிகரித்துள்ளது.

ஆபிரிக்க நாடான தன்சானியாவின் விக்டோரியா ஏரியில் சென்ற சொகுசு படகு ஒன்று உகாரா தீவு அருகே தண்ணீரில் மூழ்கியது. தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர்.

படகு முழுவதும் தண்ணீரில் மூழ்கிய விபத்தில் பலர் பலியாகினர். விபத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 207 ஆனது என தகவல்கள்வெளியாகின. மேலும், உயிருடன் இருப்பவர்களை மீட்கும் பணியில் தொடர்ந்து நீச்சல் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் சிலரை உயிருடன் மீட்டு வந்தனர்.

இந்நிலையில், தன்சானியாவின் விக்டோரியா ஏரியில் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 225 ஆக அதிகரித்துள்ளது என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து கடலில் மூழ்கியவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த விபத்து தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். படகு மூழ்கி விபத்துக்கு காரணமானவர்களை கைது செய்ய தன்சானியா நாட்டின் ஜனாதிபதி ஜான் மகுபுலி உத்தரவிட்டுள்ளார். (7)

### ஒடிசாவில் மின்சாரத் த...

## மெழுகுவர்த்தி வெளி... நோயாளர்களுக்கு சி...

(ஒடிசா)


ஒடிசாவின் மயூர்பஞ்ச் பகுதியில் போதிய மின் விநியோகம் இல்லாததால் அரச வைத்தியசாலையில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் மின்தட்டுப்பாடு காரணமாக அறிவிக்கப்படாத மின்வெட்டு நீடிக்கிறது. எப்போது மின்சாரம் வரும் என்று தெரியாத நிலையில் பொதுமக்கள் கடுமையாக பாதிகப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்... வைத்... இருந்தா... ளிகளு... அளித்... இல்லா... மற்றும்... வைத்தி... பட்டு, ... கப்படுகி...

# ா படகு விபத்தில்
# 225 ஆக உயர்வு





# அமெரிக்கா -சீனா மோதல் டொனால்ட் ட்ரம்பே காரணம்

## சீனா குற்றச்சாட்டு

(பீஜிங்)

அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையே மோதல் அதிகரித்ததற்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அடாவடிப் போக்கே காரணம் என சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

சீனா மற்றும் அமெரிக்காவிற்கிடையில் பனிப்போர் தொடர்ந்து நடந்து வந்தாலும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர் மோதல் அதிகரித்துள்ளது.

சீனா ரஷ்யாவுடன் நட்புறவை அதிகரித்தமையே இம் மோதலுக்கு முக்கிய காரணமாகும்.

சீனாவின் வர்த்தக ரீதியான அணுகு முறை தவறாக இருப்பதாகக் கூறி 267 பில்லியன் டொலர் அளவிற்கு பொருளாதாரத் தடை விதிக்கப் போவதாக ட்ரம்ப் அறிவித்தார்.

அதன் ஆரம்பகட்டமாக 34 பில்லியன் டொலர் மதிப்பிலான சீனப் பொருட்களின் மீது 10சதவீத வரியை அமெரிக்கா விதித்தது.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சீன இறக்குமதிப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்திருந்தது.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் 60 பில்லியன் டொலர் அளவிலான அமெரிக்க இறக்குமதிப் பொருட்கள் மீது 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை வரி விதிக்க சீனா முடிவெடுத்துள்ளது. (7)

# நட்பு நாடுகளுக்கு மட்டுமே நிதியுதவி

## ட்ரம்ப் ஐ.நாவில் அதிரடி முடிவு

(நியூயோர்க்)



தனது நாட்டுடன் நட்பு பாராட்டும் மற்றும் மதிப்பளிக்கும் நாடுகளுக்கு மட்டுமே அமெரிக்கா நிதியுதவி வழங்குமென அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 73 ஆவது பொதுச் சபை கூட்டத் தொடரின் பிரதான அமர்வு இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் நியூயோர்க் நகரிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் ஆரம்பமானது.

முழு உலகும் எதிர்பார்த்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வருட பொதுச்சபை கூட்டத்தொடர் "ஐக்கிய நாடுகள் சபையை சகல மக்களுக்கும் அணுகச் செய்தல், நீதியும் அமைதியும் பேணதகு தன்மையும் கொண்ட சமூகத்திற்கான உலகளாவிய தலைமைத்துவத்தின் ஒன்றிணைந்த பொறுப்பு" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் குறித்த நிகழ்வில் பங்கேற்ற ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சோஷலிஸம், உலகமயமாதல் என்பன தோற்று விட்டன. இனி உலக நாடுகளுக்கு இலவச நன் கொடை தரமாட்டோம். எந்த நாட்டு பாதுகாப்பையும் பொறுப்பெடுக்கவும் மாட்டோம். அனைத்தையும், அமெரிக்க நலனை முன்நிறுத்தியே தீர்மானிப்போம்".

ஐக்கிய அமெரிக்கா வோடு எந்தெந்த நாடுகள் மதிப்பளித்து நடக்குமோ எந்த நாடுகள் தமது நாட்டுடன் நட்பு பாராட்டி செயற்படுமோ அந்த நாடுகளுக்கு மாத்திரமே ஐக்கிய அமெரிக்கா நிதியுதவிகளை வழங்கும் எனத் தெரிவித்தார்.

தற்போது அனைத்து நாடுகளிடத்திலும் பொருளாதார மற்றும் நிதிநெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதில் ஐக்கிய அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில் அதன் அடுத்தக் கட்டமாக குறித்த நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக பல உலக நாடுகள் பாதிப்புக்குள்ளாக உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (7)

# த் தட்டுப்பாடு
# வளிச்சத்தில்
# கு சிகிச்சை

டு
ன்
சா
ல்
க

ல்
ல்

இந்நிலையில், ராரன் தாலுகா வைத்தியசாலையில் மின்சாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நோயாளிகளுக்கு தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகின்றனர். மின்சாரம் இல்லாத நேரத்தில் மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச் லைட் வெளிச்சத்தில் வைத்திய பரிசோதனைகள் செய்யப்பட்டு, மருந்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. (7)

# ஆப்கானிஸ்தானில் பீரங்கி தாக்குதல் ஒரே குடும்பத்தை சேர்ந்த 9 பேர் பலி

(காபூல்)


ஆப்கானிஸ்தானில் பீரங்கி குண்டு, குடியிருப்பு பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 9 பேர் பரிதாபமாக பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து 18ஆவது ஆண்டாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது.

இந்த நிலையில் அங்குள்ள கபிசா மாகா ணம், தகாப் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பாதுகாப்பு படைகளுக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

அப்போது அல்மாஸ் கேல் என்ற கிராமத்தில் ஒரு பீரங்கி குண்டு, குடியிருப்பு பகுதியில் விழுந்தது.

இதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 9 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். (7)



# அரசாங்கத்திற்கு எதிராக இராணுவம் கிளர்ந்தெழும்

## மேஜர் அஜித் பிரசன்ன எச்சரிக்கை



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை பதவியிலிருந்து விலக்கிவிட்டு அப்பதவியை பிரித்தானிய பிரபுக்கள் சபை உறுப்பினருக்கு வழங்கினால் அவர் இலங்கை இராணுவத்தினர் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்பார்.

மேலும் அரசாங்கம் இராணுவத்தினர் மீது கெடுபிடிகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டில் இருபது இலட்சம் பேர் வரையிலான இராணுவத்தினர் உள்ளனர். எனவே அவர்கள் அனைவரும் எப்போதாவது அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள் என்று எச்சரிக்கை விடுக்கிறேன். அந்த எழுச்சி எவ்வாறு அமையும் என்பதைத் சொல்ல முடியாதென சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்ன மேலும் தெரிவித்தார்.

“தாய் நாட்டுக்காக இராணுவத்தினர்” அமைப்பு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பு ஸ்ரீவஜிராஷ்ரம பௌத்த நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (7)

# தேசிய உற்பத்திகளுக்கு எதிரான இறக்குமதியே ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையக் காரணம்



## முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூறுகிறார்

(கொழும்பு)

இந்தியாவின் பொருளாதாரத்தினை இலங்கையின் பொருளாதாரத்துடன் ஒப்பிட முடியாது என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய உற்பத்திகளுக்கு எதிரான இறக்குமதிகளின் அதிகரிப்பே ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

ரூபாவின் தொடர் வீழ்ச்சி குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருகின்றது. தற்போது இந்நிலைமை உக்கிரமடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு இறுதியில் 131 ரூபாவாகக் காணப்பட்ட டொலரின் பெருமானம் இன்று 170 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதனால் பொருளாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படுகின்றது என அரசாங்கத் தரப்பு குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனது ஆட்சிக்காலத்தில் அதாவது 2007 - 2008 வரையான காலப்பகுதியில் உலக பொருளாதார நெருக்கடியின் காரணமாக தென் கொரியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் உட்பட ஆசிய நாடுகளில் பணப்பெறுமதி அமெரிக்க டொலருடன் ஒப்பிடப்பட்டு பாரிய வீழ்ச்சி அடைந்தது. அன்று காணப்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி இலங்கையிலும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்தியாவின் பொருளாதாரத்தினை இலங்கையின் பொருளாதாரத்துடன் ஒப்பிட முடியாது. இந்தியாவின் பொருளாதாரத்தின் ஒரு பகுதியே இலங்கை. எனது ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் இன்று ஒரு தனிக் கட்சியின் பொருளாதாரக் கொள்கையாக பின்பற்றப்பட்டு வருகின்றது.

இன்று 4 வீதத்துக்கும் குறைவான பொருளாதார வளர்ச்சியே காணப்படுகின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம், சர்வதேசத்தில் முன்னிலைப்பட வேண்டும் என்ற நோக்கில் தேசிய உற்பத்திகளுக்கு எதிரான இறக்குமதிகள் இடம்பெறுகின்றமையின் காரணமாகவே ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றது என மேலும் தெரிவித்துள்ளார். (7)

# 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் மக்கள் வாக்கெடுப்புடன் நிறைவேறும்

## அநுரகுமார உறுதி



(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மக்கள் வாக்கெடுப்புடன் நிச்சயம் நிறைவேறும் எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் மாத்திரம் நிறைவேற்றப்பட்டால் போதும் என குறிப்பிடுவது சிலரது சுயநல நோக்கங்களை நிறைவேற்றுவதாக அமையும் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் 70 வருட ஆட்சியில் அனைத்து தலைவர்களும் மோசடியாளர்களாகவே காணப்படுகின்றனர். குறுகிய பதவிக் காலத்தில் எவ்வளவு தமக்கும் தமது பரம்பரையினருக்கும் இருப்புக்களை சேகரிப்பது என்று மாத்திரமே சிந்திக்கின்றனர். இதன் ஊடாக ஏற்படும் எதிர் விளைவுகளை கவனத்தில் கொள்ள மறுக்கின்றனர். கடந்த அரசாங்கத்தை தேசிய அரசாங்கமும் தேசிய அரசாங்கத்தை கடந்த அரசாங்கமும் குற்றஞ்சாட்டுவது மாத்திரமே சிறப்பாக இடம்பெறுகின்றது என்றார். (7)

# ஜனாதிபதியைக் கொலை செய்தால் நேரடித் தாக்கம் பிரதமருக்கே

(கொழும்பு)

நாலக டி சில்வா மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு இடையிலான உறவை உறுதிப்படுத்துவதற்காக பிரதான சாட்சிகள் 05 இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பக்கச்சார்பு, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், முறையற்ற நடத்தை உள்ளிட்டவை அந்தச் சாட்சிகள் என்று அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் பதவி விலகாவிட்டால் அவரை பாராளுமன்ற தீர்மானத்தின் மூலமாக மாத்திரமே பதவி நீக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக அதற்கு பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவு வழங்காவிட்டால் ஜனாதிபதியை கொலை செய்யும் திட்டத்தில் அந்தக் கட்சிக்கு தொடர்பிருப்பதாக சந்தேகம் ஏற்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அதேநேரம் ஜனாதிபதி உயிரிழந்தால் அதன் நேரடித் தாக்கம் பிரதமருக்கே இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (7)

# இன்று ஒரு தகவல்

## முகம் சுழிக்காக் கலை!

ஒருவரைப் பற்றிப் பாராட்டும்போது பல அம்சங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அவற்றுள் மிகவும் விரும்பத்தக்க பாராட்டு என்று ஒன்று உண்டு.

அது அவள் அல்லது அவர் எதற்குமே முகம் சுழிக்கமாட்டாள்/ர் என்கிற பாராட்டு. ஒரு சில வேலையாட்களை அல்லது பிற நிலை அலுவலர்களை ஒரு முதலாளிக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கும். அவற்றுள் ஒன்றாக நிச்சயம் முகம் சுழிக்காததும் இருக்கும். முகம் சுழிக்காதவர்களை முதலாளிகளுக்கு மட்டுமல்ல அனைவருக்குமே பிடித்துப் போகிறது.

ஒரு சிலர் முகம் சுழிப்பார்களே தவிர அந்த வேலையைச் செய்து முடித்து விடுவார்கள் .ஆனால் இதில் 50 சதவிகிதம் நல்ல பெயர் தான் மிஞ்சும். ஆனால் முகம் சுழிக்காமல் “அப்படியா? சரி உடனே செஞ்சிடுறேன்!” “ஆகட்டும்” என்றெல்லாம் சொல்லியபடி முகம் சுழிக்காமல் ஒரு செயலைச் செய்தால் அதற்கு 200 மார்க்.

ஆமாம் நமக்கு இப்பட்ட ஒரு செயலை நாம் செய்கிறோமா? இல்லையா? என்பதற்கு அடுத்தபடியாக நாம் அதை விருப்பத்துடன் செய்கிறோமா? முகம் சுழித்துச் செய்கிறோமா? என்பது பெரும்பாலும் மிகத் துல்லியமாக மற்றவர்களால் கவனிக்கப்படுகிறது.

ஒப்படைக்கப்படுகிற செயற்பாடு மட்டுமல்ல, நம்மிடம் கேட்கப்படும் உதவி, நாம் மற்றவர்களின் கருத்துக்குப் பிரதிபலிக்கும் விதம், மற்றவர்களை நாம் வரவேற்கும் விதம் ஆகியவற்றில் கூட நாம் முகம் சுழிக்காமல் இருக்கிறோம? என்பது மிக உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. எனவே இந்த விடயத்தை இலேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒன்றை நாம் விரும்பாத காரணத்தால் முகம் சுழிக்கிறோம் அல்லவா இதை நாம் கட்டுப்படுத்த வேண்டும்.

ஆமாம் விரும்பத்தகாத விடயங்களையும் எவ்வித முகச் சலனமும் இன்றி ஜீரணிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

மற்றவர்களிடம் ஏற்படக்கூடிய உண்மையான பிரியத்தைக் சரிவரப் பிரதிபலிக்காத நாம் எதற்காக எதிர்மறையான (Negative Feelings) உணர்ச்சிகளை ஏன் உடனே பட்டவர்த்தனமாகப் பிரதிபலிக்க வேண்டும்?

இம்மாதிரியான விடயங்களையெல்லாம் ஒரு கைதேர்ந்த நடிகரைப்போல் கையாள்வது நல்லது. அடிதடியில் இறங்காமல், சுடுசொல் சொல்லாமல் எவ்வளவோ பக்குவத்துடன் நடந்து கொள்கிறோம். அதன் ஒரு கட்டம் தான் முகம் சுழிப்பது. அதையும் வேண்டாம் என்று சொன்னால் எப்படி என்று கேட்கிறீர்களா? அதுவும் சரிதான். ஆனால் இந்த நிலையையும் கடந்து எத்தகைய சூழலிலும் மாறாத புன்சிரிப் போடும் இயல்பான மன நிலையோடும் மற்றவர்களிடம் பேச முடியுமானால் அது மிகச் சிறந்த மனிதாபிமானமாகக் கருதப்படும்.

**லேனா தமிழ்வாணன்**

# ஈழத்தமிழர் விவகாரத்தில் தி.மு.கவின் பங்கு

## டெசோ முதல் டெசோ வரை!

முன்னதாக, அதை மத்திய அரசு ஆதரிக்க வேண்டுமெனக் கோரி மார்ச் 22 அன்று உண்ணாவிரதம் நடத்துவது; அப்படி மத்திய அரசு ஆதரிக்காவிட்டால் அதிலிருந்து விலகுவது எனத் தி.மு.க. அறிவித்தது. அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்கப்போவதாக பிரதமர் மன்மோகன் அறிவித்ததும் இரண்டையும் கைவிட்டது தி.மு.க.

முன்னதாக, பன்னாட்டு போர்க் குற்ற விசாரணை, தனி ஈழம் குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழகத்தில் போராட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன. 2011 ஜூன் 26 ஆம் திகதி மெரினாவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற ஒன்றுகூடல் நடைபெற்றது. தி.மு.கவின் பிரமுகர்களும்கூட அதில் பங்கேற்றனர்.

சேவ் தமிழ் இயக்கம், மே 17 இயக்கம், போர்க்குற்றங்களுக்கு எதிரான இளைஞர்கள் இயக்கம் போன்ற அமைப்புகள் சார்பில் பல்வேறு பிரசார நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இப்படியான நிலையில், 2012 மார்ச் 18 அன்று தி.மு.க. தலைவர் கி.வீரமணி சென்னையில் செய்தியாளர் கூட்டத்தில், டெசோவை மீள் உருவாக்கவேண்டும் எனக் கூறினார். அதையடுத்து, அந்த மாதம் 30 ஆம் திகதியன்று இரண்டாவது டெசோ உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக கருணாநிதி, உறுப்பினர்களாக க.அன்பழகன், கி.வீரமணி ஆகியோர் இருப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. 1985 இல் டெசோவில் இருந்த பழ.நெடுமாறன் இதில் இல்லை. அவருக்கு மாற்றீடு போல பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சேர்க்கப்பட்டார்.

தமிழ் ஈழத்துக்காகத்தான் இரண்டாவது டெசோ என்று தீர்மானமாக அறிவித்த கருணாநிதி, அடுத்த 3 மாத காலத்தில் அந்த நிலைப்பாட்டில் பிடிமானமில்லாமல் மாறிமாறிப் பேசினார்.

ஏப்ரல் 25 அன்று வட சென்னையில் நடந்த கூட்டத்தில், "இதுவரை நிறைவேறாத கனவு, தனி ஈழம். அதற்கான உரத்தை, பலத்தை, எழுச்சியை உருவாக்கிவிட்டுத்தான், உலகத்தைவிட்டு விடைபெற விரும்புகிறேன்" என்றார்.

ஏப்ரல் 30 அன்று நடந்த புது டெசோ கூட்டத்தில், "இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு தனித் தமிழ் ஈழத்தைத் தவிர வேறு வழி இல்லை. விரைவில் தமிழீழம் அமைய, இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் ஐ.நா. மன்றம் மூலம் பொதுவாக்கெடுப்பு நடத்தவேண்டும்" எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூரில் நடந்த தன் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில், "ஈழத் தமிழர்களின் மீட்சிக்காகவே டெசோ மாநாடு நடத்தப்படுகிறது. வெகு விரைவில் தனித் தமிழீழ நாட்டை உருவாக்க இந்த மாநாடு பயன்படவேண்டும்" என்று கருணாநிதி பேசினார்.

ஜூலை 16 அன்று அறிவாலயத்திலும் 23 அன்று கோபாலபுரம் வீட்டிலும் அளித்த பேட்டிகளில் மாறுபாடு வெளிப்பட்டது.

"ஈழத் தமிழ்நாடு எனும் கோரிக்கையை கைவிட்டுவிடவில்லை. அதிலிருந்து தி.மு.க. பின்வாங்கிவிடவில்லை. தமிழீழம் என்பது தி.மு.கவின் குறிக்கோள். அது நிறைவேறும் நிலை உருவாகும்போது அதற்காகப் படிப்படியாக முயற்சி மேற்கொள்வோம்" என்கிற அளவுக்குத் தி.மு.கவின் நிலைப்பாட்டில் மாற்றத்தை வெளிப்படுத்தினார் கருணாநிதி.

ஓகஸ்ட் 5 அன்று விழுப்புரத்தில் டெசோ மாநாடு நடத்தப்படும் என அறிவித்த கருணாநிதி பின்னர் அதை சென்னைக்கு மாற்றி ஓகஸ்ட் 12 ஆம் திகதிக்குத் தள்ளிவைத்தார்.

எந்தக் காங்கிரஸ் கட்சி, ஈழத்தமிழர் விடுதலை இயக்கப் போராளிகளுக்கு ஆயுதம் தந்து பயிற்சியும் அளித்ததோ, அதே கட்சியின் ஆட்சி, அடுத்த நாட்டின் இறையாண்மையில் அக்கறைகொண்டு, 'தமிழ் ஈழ ஆதரவு' என்கிறபடி டெசோ மாநாடு கூடாது என நிபந்தனை விதித்தது. அதை ஒப்புக்கொண்டபடி டெசோவின் மாநாடு, 'ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு' என்று ஆனது.

அறிவிக்கப்பட்டபடி, ஓகஸ்ட் 12 ஆம் நாளன்று, சென்னை, ராயப்பேட்டை, வை.எம்.சி.ஏ. திடலில் நடந்த டெசோ மாநாட்டின் தீர்மானம், தி.மு.கவின் நிலையைத் தெளிவுபடுத்தியது. 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் அதில் ஒரு தீர்மானம் கூட, தனி ஈழத்துக்கு ஆதரவு என்ற வாசகத்தைக் கொண்டிருக்கவில்லை.

"போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம் தான்' என்று கூறிய ஜெயலலிதா, பின்னாளில் "இனப்படுகொலை குறித்து பன்னாட்டு விசாரணை நடத்தவேண்டும்' எனச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்ததைப் போலவே, தமிழீழம் தமிழீழம் எனத் தமிழக இளைஞர்களின் நாடி நரம்பெல்லாம் உணர்வேற்றியதில் முக்கிய பங்கு வகித்த கருணாநிதி, தனி ஈழம் என்பதை விட்டுவிட்டு டெசோ மாநாடு நடத்தியதும், ஈழ ஆதரவு வரலாற்றில் பெரும் நகைமுரண்!

(முற்றும்)

ஜூனியர் விகடன்



"போர் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டி விட்டன. கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவது மட்டுமே நிறுத் தப்பட் டுள்ளது"என இலங்கை இராணுவம் சார்பில் விளக்கமளிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் கடற்கரையில் திரண்டிருந்த ஈழத்தமிழர்களில் சில நாட்களில் பத்தாயிரக்கணக்கில் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். தேர்தல் முடிவுகள் வெளியானவுடன், அமைச்சரவைப் பங்கீடு தொடர்பாகப் பேச டில்லி சென்றார், கருணாநிதி. உடன்பாடு எட்டப்படாமல் போக, வெளியிலிருந்து ஆதரவு என அறி வித்தார். பின்னர், ஒரே நாளில், அமைச்சரவையில் பங்கேற்க ஒப்பு தலையும் பட்டியலையும் அனுப்பி னார்.



# மகிந்த அரசு கடன்களை நன்மையான திட்டத்திற்காகப் பயன்படுத்தவில்லை

## பிரதமர் ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

மகிந்த அரசாங்க காலப் பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட வர்த்தகத்திற்கான கடன்கள் நன்மையான திட்டத்திற்காக பயன்படுத்தாதன் காரணமாக அதன் பெறுபேறுகளை இப்பொழுது காணக்கூடியதாக இல்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெள - வெதிவேவ என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட தேசபிதா டி.எஸ்.சேனநாயக்க என்ற எழுச்சிக் கிராமத்தை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த நிதியமைச்சராக இருந்த காலப்பகுதியில் டொலருக்கு நிகராக ரூபாய் நான்கு மாத காலப் பகுதியில் பாரிய அளவில்வீழ்ச்சியடைந்த முறையை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நீரில் மூழ்கிய இளைஞரை கரைசேர்த்த சுழியோடிகள்

(தம்புள்ளை)

ரங்கிரி தம்புள்ளை உயன்வத்தை பகுதியில் அமைந்துள்ள ஆற்றில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிய வேளையில் சுழியோடிகளால் காப்பாற்றப்பட்டார்.

இந்ச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சுற்றுலா சென்றிருந்த நிலையில் இளைஞர்கள் குறித்த ஆற்றில் நீந்திக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கியதை அவதானித்த சுழியோடிகள் விரைந்து செயற்பட்டு குறித்த இளைஞரை காப் பாற்றினார்கள். (7)


# இரு நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜீவநதியின் வெளியீடாக கலாநிதி த.கலாமணியின் "இலக்கியமும் உளவியலும்", "தரிசனப் பறவைகள்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அல்வாய் கலையகத்தில் எழுத்தாளர் அ.பௌநந்தி தலைமையில் இடம்பெறும்.

வெளியீட்டுரையை எழுத்தாளர் மா.செல்வதாஸ் வழங்குவதுடன் கருத்துரைகளை எழுத்தாளர்கள் த.அஜந்தகுமார், புலோலியூர் வேல்நந்தகுமார் ஆகியோர் வழங்குவர். (7)

# தேசிய கடெட் படையின் பணிப்பாளர் நியமனம்



(கொழும்பு)

தேசிய கடெட் படையணியின் புதிய பணிப்பாளராக மேஜர் ஜெனரல் எம்.எம்.எஸ். பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து மேஜர் ஜெனரல் எம்.எம்.எஸ்.பெரேரா மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேயவர்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த சந்திப்பில் தேசிய கடெட் படையணியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி

(இரத்தினபுரி)

இரத்தினபுரி-ஹதமுண பிரதேசத்தில் மின்னல் தாக்கி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் பிரதேசத்தில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்துள்ளது.

இதன்போது மின்னல் தாக்குதலுக்கு உள்ளான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

34 வயதுடைய ஹதமுண பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 6 விதி எண் 9

சுக்கிரன், செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கம்பீரத் தோற்றமும் குறுகுறுப்பான நடவடிக்கையும் உடையவர்கள். மிகுந்த தைரியசாலிகள். போராடி வெற்றி பெறுவதையே இலட்சியமாகக் கொண்டிருப்பார்கள். பேரறிவும் பெரும் சூழ்ச்சித் திறனும் கொண்டவர்கள். காந்த சக்தி நிறைந்த கண்களை உடையவர்கள். எதையும் உன்னிப்பாகக் கவனிக்கும் ஆற்றல் உடையவர்கள். இவர்கள் உயர்ந்த இடத்தைப் பிடிப்பதையே இலட்சியமாகக் கொண்டு குறிக்கோளுடன் பணியாற்றுவார்கள்.

பூமியை ஆள்வார்கள். பூமித்தாயின் புதல்வர்கள் என்ற பெயர் உடையவர்கள். குருபக்தியும் இறை பக்தியும் மிகுந்திருக்கும். இராஜதந்திரமும் சூழ்ச்சியும் தெரிந்தவர்கள். பேச்சில் கண்டிப்பும் கோபமும் இருக்கும். உலக இன்பங்களில் பற்று வைத்திருப்பார்கள். உலகமே மாயை என்பதை மறுப்பார்கள். மிக விரைவில் முன்னேறுவார்கள். இளமையில் போராடி வயது ஏற ஏற வெற்றி அடைவார்கள். அரசியல் ஞானமும் சட்ட நுணுக்கமும் அறிந்தவர்கள். எதிலும் முன்னெச்சரிக்கை உடையவர்கள்.

தேச நலனில் மிக அதிகளவான அக்கறை உடையவர்கள். தன்னுடை இனங் காப்பதில் வல்லவர்கள். சுற்றுலாப் பிரியர்கள். கலை மற்றும் பொது அறிவு நிரம்பியிருக்கும். இரகசியம் காப்பதில் வல்லவர்கள். இவர்கள் தொட்டதெல்லாம் துலங்கும். பூர்வீகச் சொத்துக்கள் கைகொடுக்கும். இந்த பூமியை ஒரு உல்லாச உலகமாக மதிப்பார்கள். சினிமாவில் தன்னிகரற்ற சாதனை செய்வார்கள்.

அதிர்ஷ்டத்திற்குக் குறைவில்லாத வளமான வாழ்க்கை வாழ்வார்கள். தொழிலில் மேன்மை அடைவார்கள். சாதனை சிற்பிகள். சிந்தனைகளில் சிறகடித்துப் பறப்பார்கள். உடல் உறுப்புகள் அனைத்தும் நளினத்துடன் இயங்குவதாக இருக்கும். புகழ்மிக்க ஏதாவது ஒரு துறையில் முன்னேறப் பாடுபடுவார்கள். பலனடைவார்கள். முன்கூட்டியே நடக்கப் போகும் சம்பவத்தைக் கண்டு கொள்ளும் மனோ சக்தி படைத்தவர்கள். வாகனப்பிரியர்கள். தனிப்பட்ட விசேடமான ஆன்மீக முறையை கடைப் பிடிப்பார்கள். வாழ்க்கையில் பிற்கூறில் ஞானிகள், யோகிகள் போலவும் வாழ்க்கை நடத்துவார்கள். எப்போதும் நண்பர்கள் புடை சூழவே வாழ்க்கை நடத்துவார்கள்.

இவர்கள் வாழ்க்கை மற்றவர்களுக்கு விநோதமாக இருக்கும். நேற்று சாதாரண மனிதர்களாக இருந்தவர்கள் இன்று விண்மீன் போல மின்னுவார்கள். பல வகை உணவுகளை விரும்பி உண்பார்கள். எதிலும் துடிப்புடன் செயற்படுவார்கள்.

பெரியவர்களின் உதவியும் நல்வர்களின் நட்பும் கிடைக்கும். பொதுவாழ்க்கையில் பிரகாசிப்பார்கள். பானப் பிரியர்கள். சேவை மனப்




பான்மை உடையவர்கள். அயராத உழைப்பால் உயர்ந்த பதவிகளை அடைவார்கள். இணைபிரியாத நட்புகள் இருக்கும். மனதில் புதுப் புதுக் கருத்துக்கள் உதயமாகிக் கொண்டேயிருக்கும்.

தேசநலனில் அக்கறை கொள்வார்கள். சற்று உயரமாகவும் சுறுசுறுப்பாகவும் அமைதியான கண்களுடன் இருப்பார்கள். துன்பத்தைக் கண்டுத் துவள மாட்டார்கள். புதிய நாடு நகரத்தை உருவாக்கும் சக்தியிருக்கும். பிடிவாதம், கோபக் குணத்தால் சில பதவிகளை இழப்பார்கள். தனது தகுதியை இழந்து கெட்ட பெயரெடுப்பார்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் மூலம் அதிர்ஷ்டம் கிடைக்கும். புத்தகப் பிரியர்கள். ஆன்மீகச் சக்திக்குக் கட்டுப்பட்டவர்கள், பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள். கலை அழகு மிக்கவர்கள். தன்னைத் தட்டிக் கேட்பவரைக் கண்டால் மிகுந்த கோபம் வரும். உறுதியான மனமும் தன்னம்பிக்கையும் கொண்டவர்கள்.

பிறருக்கு அடிமையாக ஒருபோதும் இருக்க மாட்டார்கள். வசீகரமான கண்கள் இருக்கும். நல்ல வாழ்க்கைத் துணை அமையும். புண்ணிய காரியங்கள் செய்து புகழடைவார்கள். இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிப்பதில் ஆர்வமுடையவர்கள். ஆன்மீக பக்தியும் தேச பக்தியும் நிரம்பியவர்கள். நண்பர்களிடம் விசுவாசமாக இருப்பார்கள். புகழுக்கு மயங்கி மற்றவர்களுக்கு அடிபணியமாட்டார்கள். யாருக்கும் தலை வணங்காத சிறப்புடன் வாழ்வார்கள். அடிக்கடி வெளியூர்ப்பயணம் செய்து கொண்டிப்பார்கள். தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றும் வரை போராடி வெற்றி பெற்று விடுவார்கள். இவர்கள் மற்றவர்களுக்காக வாதாடுவார்கள். வெற்றியும் பெறுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

6, 15, 24, 5, 14, 23, 9, 18, 27.

**துரதிர்ஷ்ட திகதிகள்**

3, 12, 21, 30, 2, 11, 20, 29.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், பச்சை.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**

கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள், ஒரேஞ், ரோஸ்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

மரகதம், பவளம், பெரில், அக்கோமரின், டக்குவார்ஸ், ஜேட், ஒபல்.

(தொடரும்....)




தியாகி திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று காலை பல்வேறு பகுதிகளில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.
(படங்கள்:கரணவாய் செய்தியாளர்)

## வெற்றிலைக் கூறு விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உற்பத்தி விலை அதிகரிப்புக் காரணமாக வெற்றிலையின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய 30 ரூபாய்க்கு விற்கப்படும் 'வெற்றிலைக் கூறு' 40 ரூபாய்க்கு விற்பனை செய்வதற்கு, விற்பனையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

வெற்றிலைக்கான உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக, வெற்றிலையை குறைந்த விலைக்கு விற்பதால், அதிகம் நட்டம் ஏற்படுவதை கருத்திற் கொண்டே வெற்றிலையின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்ததாகவும் வெற்றிலை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# 2025 இல் இலங்கையை செல்வந்த நாடாக மாற்றியமைக்க முடியும்

## நிதியமைச்சர் மங்கள் உறுதி



(கொழும்பு)

முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதால் வெளிநாடுகளில் முதலீடு செய்தவர்கள் பணத்தை மீண்டும் அமெரிக்காவிற்கு எடுத்து சென்றுள்ளதனால், டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமெரிக்க டொலருக்கு நிகரா்க ரூபாவின் வீழ்ச்சி தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, ரூபாவின் வீழ்ச்சியை அரசாங்கம் என்ற ரீதியில் வெற்றிகரமாக முகங்கொடுத்திருந்தாலும், ரூபாவின் பெறுமானம் குறைவதை தவிர்ப்பதற்கு அந்நிய செலாவணியை பயன்படுத்தியிருக்கலாமென்றும், எனினும் அதை செய்யவில்லையெனவும், அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இம்முறை ரூபாவின் பெறுமானம் 9 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இலங்கையின் பொருளாதாரத்தை பலமாக முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுப்பதாகவும், 2025 ஆம் ஆண்டில் இலங்கையை செல்வந்த நாடாக மாற்றியமைக்க முடியுமெனவும் தெரிவித்தார். (7)

## கோர விபத்தில் சிக்கிய ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர்

(மாத்தறை)

மாத்தறை-திஸ்ஸ மஹாரம பிரதான வீதியில் அம்பலந்தொட்ட-தெஹிகலந்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கப்வண்டியொன்று, ஆட்டோவுடன் மோதி கடந்த திங்கட்கிழமை இரவு இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என அம்பாந்தோட்டை வைத்திய சாலையின் பேச்சாளர் ஒருவர் எமது செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பதுளை - பண்டாரவளை வீதியில் பிங்காரவ பிரதேசத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 10 பேர் பயணித்த வான் ஒன்றும், பாரவூர்தியொன்றும் மோதிய விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(7)

## பெலிகுல் ஓயா-உலகமுடிவு மலைகளுக்கிடையில் கேபிள் கார் சேவை அமைக்க நடவடிக்கை



(கொழும்பு)

சப்ரகமுவ மாகாணத்தில் பெலிகுல் ஓயா மற்றும் உலக முடிவு (Belihul Oya to World's end ) காணப்படும் மலைத் தொடர் பகுதிகளுக்கு இடையில் கேபிள் கார் சேவை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் நிலுக்கா ஹேக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் நிதியுதவியின் கீழ் இந்த திட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தர்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

பெலிகுல் ஓயா மற்றும் உலக முடிவு பகுதிகள் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்த இடமாகும். இந்நிலையில் இப்பகுதியில் கேபிள் கார் சேவை அமைக்க டுபாய் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

இந்தத் திட்டத்துக்கான ஆலோசனைகளை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புத்திஜீவிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளோம்.

இதன்மூலம் குறித்த பகுதியில் சுற்றுலா பிரயாணிகளின் வருகை மேலும் அதிகரிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கலந்துரையாடியதாகவும், சிவனொளிபாத மலை தவிர்ந்த ஏனைய மலைப்பகுதிகளில் எங்கு வேண்டுமென்றாலும் கேபிள் கார் சேவையை செயற்படுத்தலாம் என ஜனாதிபதி தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் பரிந்துரை

(கொழும்பு)

பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவிற்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபரொருவரை நியமிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பரிந்துரை செய்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் விரைவில் நியமிக்கப்படுவார் என ஆணைக்குழுவின் செயலாளர் சமன் திசாநாயக்க கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளதாவது, பொலிஸ் ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கு அமைய, புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபரை நியமிப்பது தொடர்பான ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்துள்ளார். இதேவேளை பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர அடுத்த வாரமளவில் ஸ்கொட்லாந்திற்கு விஜயம் செய்யவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

## பிணைமுறி மோசடி

## முன்னாள் நிதியமைச்சர் ரவிக்கு எதிராக எழுத்துமூல விமர்சனம்

(கொழும்பு)

பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் பொய்ச் சாட்சியம் வழங்கியதற்கு எதிராக, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான விசாரணை சம்பந்தமாக எழுத்துமூல விமர்சனத்தை முன்வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான மனு நேற்றுகொழும்பு பிரதான நீதவான் ரங்க திசாநாயக்க முன்னிலையில் அழைக்கப்பட்ட போது எழுத்து மூல விமர்சனத்தை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதால் காலஅவகாசம் வழங்குமாறு குற்றப் புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.



இந்தக் கோரிக்கையை கருத்திற் கொண்ட பிரதான நீதவான் ரங்க திசாநாயக்க, நாளைய தினத்திற்கு முன்னர் அது தொடர் பான எழுத்து மூல விமர் சனத்தை முன்வைக்குமாறு அவகாசம் வழங்கியுள்ளார்.(7)

## ரயில் மோதியதில் ஒருவர் பலி

காலிங்க மாவத்தை, களனிவெளி ரயில் பாதையில் ரயிலுடன் ஆட்டோ ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில், நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு கோட்டையிலிருந்து அவிசாவளை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த குறித்த ரயிலின் மீதே, நபர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர், கிரிவன்துடுவ பிடிபன பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடையவர் எனப் பொலிஸார்தெரிவித்துள்ளனர் (7)

# வாளிக்குள் விழுந்த பெண் குழந்தை பலி!

## பம்பலப்பிட்டியில் சம்பவம்

நீர் நிரம்பிய வாளியொன்றுக்குள் தவறுதலாக விழுந்த குழந்தையொன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் 4 வயதுடைய பெண் பிள்ளையே பரிதாபமாக உயிரிழந்துள்ளது. குறித்த குழந்தை நீர் நிரம்பிய வாளிக்குள் தவறுதலாக விழுந்த போதிலும் உடனடியாக களுபோவில வைத்தியசாலை யில் சிகிச்சைக் காக அனுமதிக் கப்பட்ட போதிலும் அங்கு சிகிச்சை பலனின்றி குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 80 | 160 |
| தக்காளி | 40 | 30 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 60 |
| கோவா | 150 | 130 | 60 | 120 |
| கரட் | 130 | 140 | 120 | 240 |
| பூசணி | 50 | 50 | 40 | 60 |
| புடோல் | 60 | 50 | 30 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 95 | 100 |
| பாகற்காய் | 140 | 140 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 35 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 70 | 50 | 30 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 90 | 100 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 160 |
| க்த்தரித்ம்புள்ள | 60 | — | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 160 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 48 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 160 | 110 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 90 | 160 |
| முள்ளங்கி | 50 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 40 | 110 | 80 |

## சிறுவர் தின விழா

(யாழ்ப்பாணம்)

திருக்குடும்ப கன்னியர் மட பாலர்பாடசாலை முன்பள்ளியின் சிறுவர் தின விழா எதிர்வரும் 01 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மடஅதிபர் அருட் சகோதரி பிரான்சிஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.(7-106)

# மரண அறிவித்தல்

## திருமதி.இரத்தினகோபால் சுந்தரம்மா



காரைநகர் புது றோட்டை பிறப்பிடமாகவும் மல்லிகை, காரைநகர் மற்றும் இல. (10) 26, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இரத்தினகோபால் சுந்தரம்மா அவர்கள் நேற்று அதிகாலை (26.09.2018) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் இரத்தினகோபால் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியரின் அருமை புதல்வியும், சரவணமுத்து ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயராசா (PARTNER- SUPERSHOES, UNITEL, DIRECTOR- SRIGAJAN (PVT LTD) அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவராசாவின் சிறிய தாயாரும், கோமதி, தமிழ்செல்வி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ரங்கஜன் (தரம் 11-யாழ்.இந்துக் கல்லூரி), மனோரஜன் (தரம் 9-யாழ். பரியோவான் கல்லூரி), அஜித்குமார் (கனடா), விஜித்குமார் (கனடா), கிசோக்குமார் (கனடா), சரூண்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, நவரத்தினம், கமலாதேவி, சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, கனகசபாபதி, இராஜகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.9.2018 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.(10) 26, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

075 928 3812
077 728 3812

தகவல்:
குடும்பத்தினர்
இ.ஜெயராசா (மகன்)

(5801)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1515

## ஈஸ்வரன்

அதிகமாக கவலைப்பட்டா முடிகொட்டுமாம்...



ஊருல பாதிப்பேருக்கு கவலையே முடி கொட்டுறதுதான்

## அருண்

அக்னி நட்சத்திரம் நமக்கு சொல்லும் பஞ்ச் டயலொக்



மரம் செய்ய விரும்பு

## ராசாத்தி

தான் எவ்வளவு விலையுயர்ந்த புடைவை உடுத்தினாலும்



தன் குழந்தையின் வாய் துடைக்க அதை கைக்குட்டையாய் மாற்றும் தாய் பேரழகு

## இந்திரன்

கடிகாரத்திற்கு நேரத்தை மட்டுமே காட்டத் தெரியும்



அதை நல்ல நேரமாகவும் கெட்ட நேரமாகவும் மாற்ற மனிதனால் மட்டுமே முடியும்

## சபேசன்

வெள்ளைக்காரன் பிரிட்ஜ் கண்டுபிடிக்கிறதுக்கு முன்னாடியே



மண் பானையில் தண்ணி குடிச்சவங்க நாங்க

## சுவர்ணன்

பொய் சொல்றவன் பெரிய மனுசன்...



பொண்டாட்டி நம்பிற மாதிரி பொய் சொல்றவன் பெரிய மனுசன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

54

இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து, யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கர வர்த்தி மன்னர் பதினான்காம் நூற் றாண்டில் ஆட்சி நடத்தியபோது, யாழ்ப்பாண அரசு வலிமையுடன் விளங்கியது என்று கூறமுடிகிறது.

இந்த நூற்றாண்டில் தமிழ் நாட் டில் இருந்த அரசுகளால் யாழ்ப் பாண அரசைத் தாக்கி அடக்க முடியவில்லை. மாறாக மதுரையில் அதிகாரம் பெற்றிருந்த முஸ்லிம் ஆட்சியாளருடன் யாழ்ப்பாண அரசு நல்லுறவு கொண்டிருந்த தையே காணமுடிகிறது.

ஆனால் பதினைந்தாம் நூற்றாண் டில் இந்த நிலை மாறியது. அந்த நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் குன்றத் தொடங்கியிரு க்க வேண்டும். ஏனெனில் தெற் கில் சிங்கள அரசாகிய கோட்டை அரசு மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

அங்கு, சிறப்பாக ஆறாம் பராக் கிரமபாகு ஆட்சி நடத்திய போது (1412-1467), அவன் முழு இலங் கையிலும் அதிகாரம் செலுத்தும் நோக்கம் உடையவனாகக் காணப் பட்டான். அத்தோடு, தமிழ்நாட்டி லும், பாண்டிய அரசின் ஆதிக்கம் முற்றாக இல்லாமற்போய், தமிழ் நாட்டுக்கு அப்பால், தென்னிந் தியாவில் பதினான்காம் நூற்றாண் டின் இறுதிக் காலத்திலிருந்து விஜய நகரப் பேரரசு வலிமைபெற்றுக் காணப்பட்டது.

அத்தோடு பாக்குநீரிணையூ டாக, இந்திய-இலங்கை வர்த்தகத் தனியுரிமையையும் விஜயநகரப் பேரரசு தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. மேலும், விஜய நகர இராச்சியத்தின் ஆதிக்கம், யாழ் ப்பாண இராச்சியத்திலும் தனது மேலாண்மையை ஏற்படுத்தத் தவறவில்லை. அத்தோடு இதுவரை காலமும் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த கடல் வர்த்தகமும் விஜயநகர மன்னரின் செல்வாக் கின் கீழ் வந்தால் அதிக வருவாய் தந்த கடல் வர்த்தகத்தையும் யாழ் ப்பாண மன்னர் இழக்க நேரிட் டது.

இந்நிகழ்வுகள் யாழ்ப்பாண அரசை வலிமை குன்றச் செய்தன. இவ்வேளையில் முதலில் பராக் கிரமபாகு வன்னிமேல், படையெ டுத்து வன்னிமைகளைக் கைப்ப ற்றிய பின் யாழ்ப்பாண அரசின் மேல் படையெடுத்ததாக ராஜ வலிய மூலம் அறியமுடிகிறது.

ஆறாம் பராக்கிரமபாகு ஆட்சி நடத்தியபோது, யாழ்ப்பாண அர சின் மேல் படையெடுப்பு ஒன்றை நடத்தினான். அவன் அனுப்பிய படைக்குத் தளபதியாகப் பொறுப் பேற்றவன் ஒரு மலையாள இள வரசன். பராக்கிரமபாகுவின் வளர் ப்பு மகனாகக் கருதப்படும் இவன் பெயர் செண்பகப் பெருமாள். இவன் 1450 இல் நடத்திய படையெடுப் பில், யாழ்ப்பாண மன்னன் தோல்வியுற்றான்.



“செண்பகப்பெருமாளின்யாழ்ப்பாணப்படையெடுப்பின்போது, யாழ்ப்பாண இராச்சிய மன்னர்க ளாக இருந்த கனகசூரிய சிங்கை ஆரியன் கொல்லப்பட்டதாகவும் அவன் இந்தியா வுக்குத் தப்பிச் சென்றதாகவும், வரலாற்று ஆசிரியர் களிடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாண வைபவ மாலையின் கூற்றுப்படி, கனகசூரிய சிங்கை ஆரியன் தென்னிந்தியாவிலி ருந்து படைதிரட்டி வந்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி மீண்டும் ஆட்சி செய்தான் என்றும் தெரிகிறது”

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

பதினேழு ஆண்டுகள் யாழ்ப்பா ணத்திலிருந்து ஆட்சி நடத்திய செண்பகப் பெருமாள், கோட்டை யில் பராக்கிரமபாகு இறந்தபின் அதன் மன்னனாகப் பதவி பெற்று புவனேகபாகு என்ற பெயருடன் அரசாண்டான் எனச் சிங்கள நூல்களிலிருந்து தெரிய வருகின் றது.

இந் நிகழ்ச்சிக்குப் பின்பும், இக் காலப்பகுதிக்குப் பின்பும், யாழ்ப் பாண இராச்சியத்தை ஆட்சிசெய்த ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடிய வில்லை. இத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச் சக்கரவர்த்தி களின் ஆட்சி முடிவடைந்தது என்றே கொள்ளவேண்டும்.

இருந்தபோதிலும், செண்பகப் பெருமாளின் ஆட்சி ஒரு குறுகிய கால ஆட்சியாக இருந்ததன் விளை வாக, அது பாரிய தாக்கங்களைத் தமிழ் இராச்சியத்தில் ஏற்படுத்தி யிருக்க முடியாது.

ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சி முடிவுக்கு வந்தவுடன் கோட்டை இராச்சியமும் வீழ்ச்சியடைந்தது. ஆறாம் பராக்கிரமபாகுவின் மர ணத்திற்குப் பின்பு செண்பகப் பெருமாள் யாழ்ப்பாண இராச்சி யத்தை விட்டு, கோட்டை மன்ன னாகச் சென்றதன் பின்னர் மீண்டும், தமிழ்மன்னர் தமிழ்ப் பிரதேசங் களில் தமது அரசியல் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதைக் காணமுடி கிறது.

செண்பகப்பெருமாளின் யாழ்ப் பாணப் படையெடுப்பின்போது, யாழ்ப்பாண இராச்சிய மன்னர்க ளாக இருந்த கனகசூரிய சிங்கை ஆரியன் கொல்லப்பட்டதாகவும் அவன் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாகவும், வரலாற்று ஆசிரியர் களிடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

ஆனால் யாழ்ப்பாண வைபவ மாலையின் கூற்றுப்படி, கனகசூரிய சிங்கை ஆரியன் தென்னிந்தியாவிலி ருந்து படைதிரட்டி வந்து யாழ்ப் பாண இராச்சியத்தைக் கைப்பற்றி மீண்டும் ஆட்சி செய்தான் என்றும் தெரிகிறது. கனகசூரியசிங்கை ஆரி யனுக்குப் பின் அவனுடைய மகன் பரராசசேகரன் என்பவன் 1519 வரை ஆட்சி செய்ததாகவும், அவன் நீண்ட கால ஆட்சியின்போது யாழ்ப்பாண இராச்சியம் பல்வேறு வழிகளில் சிறப்புடன் விளங்கியதாகவும் வர லாற்று ஆசிரியர்கள் கருதுகின்ற னர்.

ஆனால் கனகசூரியசிங்கை ஆரி யனுக்குப் பின் யாழ்ப்பாண இராச் சியத்தில் ஆரியச்சக்கரவர்த்தி வம் சம் என, தமிழ் வரலாற்று நூல்க ளில் கூறப்பட்ட அரசர்களின் ஆதி க்கம் முடிவடைந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

காரணம், செண்பகப் பெருமா ளின் பின் யாழ்ப்பாண இராச்சி யத்தை ஆண்ட அரசர்களின் பெயர் களை நோக்கின், அப் பெயர்கள் ஆரியர் என்ற ஆரியச் சக்கரவர் த்தி வம்சத்திக்குரிய அடைப்பெயர் களைக் கொண்டவையாகக் காணப்படவில்லை.

மேலும், பரராசசேகரன் என்ற பெயர் சிங்கைநகர் மன்னர்களி னால் சூடப்படும் சிம்மாசனப் பெயராக மாறி வருவதை அவதா னிக்க முடிகிறது. எனவே பரராச சேகரன் என்ற பெயர் ஒரு பட் டப்பெயர் என்றே கொள்ள முடிகின்றது. பரராசசேகரனின் உண் மைப்பெயரை அறிய ஆதாரங்கள் எதுவுமில்லை.

பரராசசேகரனுக்குப் பின் யாழ் ப்பாண இராச்சிய மன்னனாக 1519 இல் முதலாம் சங்கிலி மன்னன் வருகின்றான். இவன் காலத்தில் போர்த்துக்கீசரின் தலையீடுகளும், படையெடுப்புக்களும் யாழ்ப்பாண இராச்சியத்தில் இடம் பெற்றன. முதலாம் சங்கிலியன் ஆட்சி 1565 வரை நடைபெற்றதாக போர்த்துக் கீச ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

1565களை அடுத்து, காசி நயி னார், பெரியபிள்ளை, புவிராஜ பண்டாரம், எதிர்மன்னசிங்க கும ரன் போன்றோர் யாழ்ப்பாண இரா ச்சிய மன்னராக இருந்தனர்.

போர்த்துக்கீசரின் தொடர்ச் சியான தலையீடுகளாலும், படை யெடுப்புக்களாலும், இக்கால கட்ட யாழ்ப்பாண இராச்சிய மன் னர் பல நெருக்கடிகளை எதிர் நோக் கினர்.

இறுதியாக, 1591 இல் போர் த்துக்கீசருக்கும், யாழ்ப்பாண அரசர்களுக்கும் இடையில் எழு தப்பட்ட நல்லூர் உடன்படிக்கை யின்படி, யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கீசருடைய மேலாண் மையை ஏற்றுக்கொண்டது என்று கொள்ள முடிகிறது.

இறுதியாக, 1617 இல் எதிர் மன்ன சிங்கன் இறக்க, சங்கிலி குமாரன் என்பவன் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகத் தன் னைப் பிரகடனப்படுத்தினான். இவன் வரலாற்றில் இரண்டாம் சங்கிலி என அழைக்கப்பட்டான். இவன் 1619 ஆம் ஆண்டில் போர்த்துக்கீசரி னால் சிறைபிடிக்கப்பட்டு, கோவா விற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே தூக்கில் இடப்பட்டதோடு யாழ்ப் பாண இராச்சியத்தின் கடைசி மன் னனான இரண்டாம் சங்கிலி காலம் தொடக்கம் போர்த்துக்கீசர் 1656 கள் வரையில் ஆண்டார்கள்.

(தொடரும்)

# திகன விமான நிலையம் தொடர்பில் ஆராய விசேட குழு நியமனம்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டிருக்கும் திகன உள்ளூர் விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளை மீள் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் 137 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விமான நிலையத்தின் நிர்மாணிப் பணிகள், சூழல் பாதுகாப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட பல அமைப்புக்களின் எதிர்ப்புக்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது.

அதன்படி நிறுத்தப்பட்டிருக்கும் நிர்மாணப்பணிகளின் குறைகளை இனங்கண்டு மீள நிர்மாணப்பணிகளை ஆரம்பிப்பதற்காக அமைச்சரினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# சியாம் கொலை வழக்கு

## வாஸ் குணவர்த்தனவின் மனு ஜனவரியில் விசாரணை



(கொழும்பு)

வர்த்தகர் முஹமட் சியாம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில், வழங்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன உட்பட 06 பேர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றம் திகதி அறிவித்துள்ளது.

குறித்த மனு பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் மற்றும் பிரியந்த ஜயவர்தன முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குறித்த மனுவை ஜனவரி 29ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க நீதிபதிகள் குழாம் இதன் போது உத்தரவிட்டுள்ளனர்.

வர்த்தகர் முஹமட் சியாம் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தமக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு சட்டத்திற்கு முரணானது என்றும் இதன் காரணமாக அந்த குற்றங்களில் இருந்து தம்மை நிபந்தனையற்ற விடுதலை செய்ய உத்தரவிடுமாறு முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மற்றும் அவரது புதல்வர் உள்ளிட்ட அறுவரும் தமது மேன்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# இனங்களுக்கிடையிலான உறவை அரசியல் ரீதியில் மீளக் கட்டியெழுப்பி காட்டினோம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் பெருமிதம்



(கொழும்பு)

யுத்தத்தினால் சீர்குலைக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்ட இனங்களுக்கிடையிலான உறவை அரசியல் ரீதியாக எவ்வாறு மீளக் கட்டியெழுப்ப முடியும் என்ற வரலாற்றை கிழக்கு மாகாண சபையின் மூலம் செய்து காட்டினோம் என முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர், தளவாய்க் கிராமத்தில் அதி நவீன ஆடைத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

எமது ஆட்சியில் எவரும் வஞ்சிக்கப்படாதது ஒருபுறமிருக்க மக்கள் நிம்மதியை அனுபவித்தார்கள். அபிவிருத்தியின் பலாபலன்களை அடைந்து கொண்டார்கள்.

30 வருட யுத்தத்தால் ஏற்பட்ட சமூகங்களுக்கிடையிலான பிரிவினையை சுமார் இரண்டரை வருடத்தில் இணைத்தோம். யுத்தக் காரணம் காட்டிக் கொண்டோ அல்லது அரசியலைக் காரணம் காட்டிக்கொண்டோ நாங்கள் ஒருபோதும் இன ரீதியாகப் பிரிந்திருக்க முடியாது.

தொழில் மூலம் ஒன்றிணைந்து வாழலாம் என்பதை எமது தொழிற்சாலைகளில் தமிழ்,முஸ்லிம், சிங்களம் உட்பட அனைத்து சமூகங்களுக்கும் வாய்ப்புக் கொடுத்ததன் மூலம் இதனை மெய்ப்பித்துக் காட்டினோம்.


நாம் திருகோணமலை சம்பூர் பகுதியிலும் அம்பாறை நாவிதன்வெளிப் பகுதியிலும் மூவின மக்களையும் இணைத்து வேலைவாய்ப்பளிப்பதற்காக ஆரம்பித்து முடிவுறுத்தப்பட்ட தொழிற்சாலை எமது மாகாண சபை நிர்வாகம் முடிந்ததன் பின்னர் இன்று வரை திறக்கப்படாமலிருப்பது கவலையளிப்பதாக உள்ளது.

அத்தொழிற்சாலைகளை தொழில் வாய்ப்புக்காக திறந்து இளைஞர்,யுவதிகளிடம் ஒப்படைக்கின்ற திராணியற்றதாக மாகாண நிர்வாகம் இருந்து கொண்டிருக்கின்றது.

கடந்த கால யுத்தத்தில் அனைத்தையும் இழந்து குடும்பங்களைப் பிரிந்து வேதனையை அனுபவித்த கிழக்கு மாகாண பெண்கள் பணிப் பெண்களாக வெளிநாடு செல்வதை நிறுத்திக் காட்டினோம். இதேபோல் இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது.

இதனை அரசியல்வாதிகள் உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார். (7)

# ஞானசார தேரரின் புதிய சபதம்



(கொழும்பு)

தனக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனை நிறைவடையும் வரை தாடி வளர்க்க ஞானசாரர் சபதமெடுத்துள்ளார்.

சிறுநீரகத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பல தடவைகள் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக செல்லும் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று முன்தினம் சிகிச்சைகளுக்காக, சிறைச்சாலை வைத்திய சாலையிலிருந்து ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்திய சாலைக்கு சென்றிருந்தார்.

இதன்போது, அவர் தாடியுடன் காணப்பட்ட நிலையில், இது குறித்து நேற்று முன்தினம் சிலர் அவரிடம் வினவிய போதே, தனது தண்டனை காலம் நிறைவடையும் வரை தான் தாடி வளர்க்க முடிவெடுத்துள்ளதாக ஞானசாரர் தெரிவித்தார். (7)

# பசிலை அவசரமாக நாட்டுக்கு வருமாறு அழைத்த மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அவசர அழைப்பையடுத்து, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

நீதிமன்றத்தின் விசேட அனுமதியுடன் வெளிநாட்டில் தங்கியிருந்த அவர் கடந்த இரண்டு மாதங்களாக அமெரிக்காவில் விடுமுறையை கழித்துள்ளார்.

இந்நிலையில், பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 10 ஆம் திகதியே நாடு திரும்புவதற்கான விமான டிக்கட்டை தயார் செய்து வைத்திருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அரசியல்துறையில் ஏற்பட்டுள்ள நிலை மற்றும் ஒன்றிணைந்த எதிரணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஒருங்கமைப்பு நடவடிக்கைகள் பல முன்னெடுக்க வேண்டியுள்ளமையால், காலம் தாழ்த்தாது உடனடியாக இலங்கைக்கு வருமாறு மகிந்த பசிலிடம் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார். (7)

# பஸ் விபத்து; 25 பேர் காயம்

(கொழும்பு)

பொலநறுவை - மெதிரிகிரிய பிரதேசத்தில், ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில், 25 பேர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம், நேற்று முன்தினம் காலை இடம்பெற்றதென, மெதிரிகிரிய பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்தவர்கள், மெதிரிகிரிய, பொலநறுவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மெதிரிகிரிய, மெரகும்புற பகுதியில் வைத்தே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, குறித்த விபத்து நேர்ந்துள்ளதென, முதற்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (7)

# மத்திய மாகாண பதில் முதல்வராக ராமேஸ்வரன் சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

மத்திய மாகாணத்தின் பதில் முதலமைச்சராக மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாசார அமைச்சர் எம். ராமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி மத்திய மாகாணத்தின் பதில் முதலமைச்சருக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஆளுநர் பி.பி. திஸாநாயக்க முன்னிலையில் நடைபெற்றது. (7)

# சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் போராட்டத்தில் ஈடுபட தீர்மானம்



(கொழும்பு)

சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில், விநியோகத்திற்கான செலவு வீதங்கள் அதிகரித்துள்ளன. அதற்கேற்ற நிவாரணங்களை பெற்றுக்கொடுக்குமாறு அரசாங்கம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் சாதகமான பதிலில்லை.

இந்நிலை தொடருமானால் நாடளாவிய ரீதியில் சமையல் எரிவாயு விநியோகத்தை முடக்குவதாக அச் சங்கம் நேற்றைய தினம் எச்சரித்துள்ளது. (7)

பதறாத காரியம் சிதறாது.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# நிதானமும் அவதானமும் வேரறுந்து போகும்போது...

நாளுக்கு நாள் ஊடகங்களில் வெளிவரு கின்ற செய்திகளால் இதயம் கருகிப் போகிறது.

அந்தளவுக்கு கொடூரமான செய்திகள் எம் செவிகளில் பதிந்து இதயத்தை எரித்துக் கருக்கு கிறது.

புகையிரதப் பாதை என்று தெரிந்தும் அவ தானமாக இருக்க வேண்டிய கார்ச்சாரதி அவ தானம் தொடர்பில் எந்தக் கவனமும் செலுத் தாமையால் நான்கு பெண்கள் பலியாகின்ற மிகப் பெரும் கொடூரம் நடந்தது.

இதேபோன்று தொலைபேசியில் கதைத்தபடி வாகனம் செலுத்துகின்ற சாரதிகள், தொலை பேசியில் சண்டை பிடித்தபடி மோட்டார் சைக் கிளை வேகமாகச் செலுத்துவோர், வாகனங் களை முந்துகின்ற போட்டியில் சின்னஞ்சிறுசு களை கொன்று பசி தீர்க்கின்ற பிரகிருதிகள் என ஒரு பெரும் அவலம் நம் மண்ணில் நடந் தாகின்றது.

இதுதான் என்றால், இரண்டு வயதுப் பால கன் உழவுஇயந்திரச் சில்லில் நசியுண்டு பலி யானான்; தந்தை உழவு இயந்திரத்தைச் செலுத் தியபோது நடந்த சோகம் என்பதான செய்திகள் நினைக்கவும்கேட்கவும்மனிதவாழ்வைவெறுக்க வைக்கக் கூடியவை.

ஆக, உழவு இயந்திரச் சில்லிலும் மற்றும் வாகனங்களின் சில்லுகளிலும் நசியுண்டு உயிரிழந்த சிறுபிள்ளைகளின் பட்டியல் நீண்டு செல்கிறது.

இவ்வாறு நடக்கின்ற மரணங்களின் அடிப் படை என்னவென்று ஆராய்ந்தால், நிதானம்; அவதானம் என்ற இரண்டும் நம்மிடம் அறவே இல்லாத நிலைமை என்பதை நாம் கண்டறிய முடியும்.

ஒரு வாகனத்தை செலுத்துவதற்கு ஆயத்த மாகும்போது, வாகனத்தை ஒருமுறை சுற்றிப் பார்த்து அதன் நான்கு சில்லுகளையும் வாக னத்தின் கீழ்ப்பகுதியையும் உற்றுப்பார்த்து விட்டு வாகனத்தை எடுக்கின்ற நடைமுறை இருக்குமாக இருந்தால், பிள்ளைகளின் உயிர் கள் மட்டுமல்ல நாய்க்குட்டி, பூனைக்குட்டி போன்ற ஏனைய ஜீவராசிகளின் உயிர்களை யும் பாதுகாக்க முடியும்.

எனினும் நிதானமின்மையும் அவதானக் குறைவும் எங்களைத் தன்பாட்டில் இயக்குகி றது.

தொலைபேசியில் கதைத்தபடி வாகனத் தைச் செலுத்தும்போது தொலைபேசியின் உரை யாடல் நம் மனநிலையில் எத்தகைய தாக் கத்தை ஏற்படுத்துகின்றதோ அந்தத் தாக்கம் விபத்தாக, மரணமாக மற்றவர்களின் உயி ரைக் காவுகொள்கின்ற கொலையாக நடந்து முடிகிறது.

தொலைபேசி அழைப்பு வரும்போது வாக னத்தை ஓரமாக நிறுத்தி கதைக்கின்ற பழக் கமோ அல்லது வாகனத்தை உரிய இடம்வரை செலுத்திவிட்டு பின்னர் தொலைபேசி உரை யாடலைச் செய்கின்ற நிதானமோ எங்களிடம் இல்லை.

இதனால் எத்தனையோ மனித உயிர்கள் அநியாயமாகப் பலியாக; அதனோடு தொடர்பு பட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் கண்ணீர் விடுகின்ற துயரம் நீண்டு செல்கிறது.

இவற்றுக்கெல்லாம் முடிவு கட்டுவதாயின் நிதானத்தையும் அவதானத்தையும் பின்பற் றுங்கள். எல்லாம் நன்றே நடக்கும்.

# இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் பொதுச்சேவைகளுக்கான கலந்துரையாடல் இன்று

அனைத்து இலங்கை ரீதியாகக் கிராம, பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத் தில் இன, மத, அரசியல் பாகுபாடின்றி பொதுமக்கள் அன்றாடத்தேவைகள், கோரி க்கைகள், குறைபாடுகளை ஏற்ற காலத்தில் அறிந்து உரிய தீர்வையும் அதற்கு ரிய பயனுறுதிமிக்க வழி வகைகளையும் பெற்றுத் தரவேண்டிய பொறுப்பு சிற ந்த ஒரு ஆணைக்குழுவி னுடைய இலக்காகும். நாட் டின் பெரும்பாலான மக்கள் கிராமப் பிரதேசங்களிலேயே செறிந்து வாழ்ந்து வருகின்ற னர். இவர்களின் அன்றாடத் தேவைகள், செயற்பாடு களை உள்ளவாறு இனாங்க ண்டு குழுவின் குறிக்கோள், சட்ட திட்டங்களுக்கமைய செயற்படுத்த வேண்டியது இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின பாரிய பணியாகும்.

இவ்வகையில் செயற்பாடு களை அரசாங்கத்தின் பெறு பேற்றை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்புத் திட் டம் மற்றும் 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத் தினதும் 2002 ஆம் ஆண் டின் 35ஆம் இலக்க இலங் கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின தும் குறிக்கோள்கள் செயற் பாடுகளுக்கமைவாக இவ் வருடம் 2018 இல் 78 வகை யான செயற்பாடுகளை இனம கண்டுள்ளது.

இச்செயற்பாடுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் நாடு பூராக நான்கு வகை யான செயற்றிட்டங்களை ஒன்பது மாகாண மட்டத் திலும் பொதுமக்களை ஒன்றுதிரட்டி அவ்வகைத் துறைகளில் உள்ள கோரிக் கைகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் செயற்றிட்டங்கள் வடிவில் மக்கள் முன்கொண்டு வரு வதே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின் பணியாகும்.

மின்சாரம், குடிநீர், பெற் றோலியம், தெருவிளக்கு பொருத்துதல் என்பன மக்க ளின் நாளாந்த வாழ்க்கை நிலையில் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய தேவைகளாகும். இவற்றை நாட்டின் மாகாண மட்டத்தி லும் மாவட்ட, பிரதேச மட்டங் களிலும் எளிதில் சென்றடை யும் வகையில் கொழும்பை தலைமையகமாகவும்வலைப் பின்னல் ஊடாக மாகாணப் பிரதிநிதிகளை நியமித்து மாதாந்த ரீதியில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு வின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்களின் ஆலோ சனைகள் வழிகாட்டல்களை கருத்தரங்கு அமர்வுகளில் வெளியிட்டு பொதுமக்களின் குறைபாடுகளையும் ஆலோ சனைகளையும் கேட்டு தர்வு களை வழங்கி வருகின்றது.

பிரதேச மட்டத்திலும் அனைத்துத் தரப்பு மத்தி யிலும் மக்களை ஒன்று கூட்டி கலந்துரையாடல் ஆலோசனை தீர்வுகளை அவர்கள் மத்தியிலிருந்து எழுத்துமூலமும் காணொலி தகவல் சாதனங்கள் ஊடாக வும் பெற்று முக்கியமான துறைகளான மின்சாரம், குடிநீர், பெற்றோலியம், தெரு விளக்கு பொருத்துதல் விட யங்களில் விழிப்புணர்வு ஏற் படுத்தி வருகின்றது.

இந்த வகையில் இலங் கையின் ஒன்பது மாகாண மட்டத்திலும் தமது பிரதி நிதிகளை நியமிப்பது அவர் களூடாக மாகாண ரீதியில் உள்ள குறைபாடுகளை தீர் வுகளை வழங்கும் வகை யில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலை மையகமான கொழும்பில் மாதாந்த கூட்டங்களை நிகழ்த்தி வருகினறது.

இவற்றைவிட மக்களு டன் நேரடியாகக் கலந்து அவர்களின் ஆலோசனை கள், விமர்சனங்களை தமது பயன்பாட்டு ஆணைக்குழு வின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உதவிப்பணிப் பாளர், உறுப்பினர்கள் ஊடாக மாவட்ட, மாகாண கூட்ட நிகழ்வுகளை நிகழ்த்தி வரு கின்றது.

இதனடிப்படையில் வட மாகாணத்தின் வலயமைப் புடன்கூடிய மக்கள் குழு அமைத்து கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் மறுநாள் 27 ஆம் திகதி கிளிநொச்சி, முல் லைத்தீவு உட்பட்ட பிரதேச ங்களிலும் பிரதிநிதித்துவப் படுத்தி மக்களைக் கூட்டி யது. மேலும் மன்னார், வவு னியா மாவட்ட மக்களின் ஆலோசனை விழிப்புண ர்வு கூட்டத்தை சென்ற ஓக ஸ்ட் 29, 30ஆம் திகதி களில் நிகழ்த்தியது.

தொடர்ந்து மாகாண ரீதி யான அனைத்து மாவட்ட மக்களையும் ஒன்றுபடுத்தி இன்று 27ஆம் திகதி யாழ்ப் பாணம் செல்வமஹால் மண்டபத்தில் நடத்தவுள்ள இந்த ஆலோசனை விழிப்பு ணர்வுக் கூட்டத்தில் பல தரப்பட்ட யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களும் வன்னிப் பிரதேச மக்களும் தம் அன் றாடப் பிரச்சினைகள், குறை நிறைகளை, ஆலோசனை களை வழங்கும் ஒன்று கூடலாக அமையும்.

ப.பாலசுப்பிரமணியம
நுகர்வோர்
ஆலோசனைக்குழு
உறுப்பினர்,
வடமாகாணம்

# கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் மகா வித்தியாலய கரப்பந்தாட்ட அணியினருக்கான கௌர விப்பு விழா இன்று வியா ழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பாடசாலை அதிபர் த. ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெ றும். (7)

## உதவும் குணம் வளர...

- நல்ல காரியங்களுக்காக உதவும் போது போசிக்காமல் உதவுங்கள்.
- உதவி கேட்டு வருபவரை அலட்சியம் செய் யாதீர்கள்
- உங்களால் தரமுடியவில்லை என்றாலும் நாளை வா, பிறகு வா என்று அலைய விடாதீர் கள். உங்கள் உதவியை நாடி வருபவரின் உண்மை நிலையை அறிந்து உதவி செய்யுங்கள
- கல்வி, விபத்து போன்றவைகளுக்கு எதவி செய்யத் தயங்காதீர்கள்
- செய்த உதவியை எக்காரணத்தைக் கொண் டும் சொல்லிக்காட்டக்கூடாது.
- காலம் அறிந்து செய்யும் உதவிதான் காலங் காலமாய் பேசப்படும்; போற்றப்படும்.
- உதவுங்கள்; உயர்ந்திடுங்கள்

# ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகளாவிய பொருளா தார நெருக்கடியை எதிர் கொள்ள இந்நாட்டின் ஏற்று மதி பொருளாதாரத்தை வலுப படுத்துவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ள வுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார்.

குருநாகலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன் றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கம் பெற் றுக்கொண்ட கடனை தொடா ந்தும் செலுத்தி வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். (ம)

# நற்கருணை பெருவிழாவும் திருவிழாத் திருப்பலியும்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கொலைவில க்கி மாதா ஆலயத் திருவிழா நேற்று புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமா னது.

இன்று வியாழக்கிழமை நற்கருணைப் பெருவிழா வும் மறுநாள் வெள்ளிக் கிழமை 5.30 மணிக்கு செபமாலையுடன் திருவி ழாத் திருப்பலியும் ஆரம்ப மாகி அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொ ரூ பப் பவனியும் ஆசீர்வாத மும் இடம்பெறும். (7-106)



# சத்திய தரிசனம்

## புன்னகையுடன் பழகுவோம்

❖ மனதை இறைவனிடம் ஒப்படைத்து விட்டால் ஆசைக ளைக் கட்டுப்படுத்தும் வலிமை உண்டாகிவிடும்.

❖ இன்பத்தையும் துன்பத்தையும் சரிசமமாக ஏற்றுக் கொள்ளுங் கள். வெறுப்பவரிடமும் அன்பு காட்ட முயற்சியுங்கள். திட்டவோ, அடிக்கவோ வருபவரிடம் கூட புன்னகை காட்ட பழகிக் கொள்ளுங்கள்.

❖ நல்லவற்றின் மீது மட்டும் பார்வையைச் செலுத்துங்கள். தீயவற்றைக் கண்டு அஞ்சி விலகுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கை மதிப்புஉடையதாக அமையும்.

❖ செயலில் ஈடுபடும்போது அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்யுங்கள். இதனால் அவை எளிதாக நிறைவேறுகிறது. உடலில் சோர்வும் ஏற்படாது.

❖ கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். அப்படியும் கோபம் வந்தால் பேசுவதைக் கைவிடுங்கள். கோபத்துக்கு மருந்து மவுனம். இதைக் கடைபிடித்தால் கோபத்தில் இருந்து தப்பித்து விடுவீர்கள்.

❖ நோயாளி உணவை சாப்பிட முடியாமல் வெறுத்து ஒதுக்குவான். அதுபோல, உள்ளம் நலிவுற்றவன் அன்பு வடிவான கடவுளைப் புறக்கணிக்கிறான்.

# மின்சாரம் தடைப்படும்

(மன்னார்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில மடுமாதா ஆலயப் பிரதேசம், மடு மாதா ஆலயம் ஆகிய பிர தேசத்திலும் மின் தடைப்ப டும். (இ-9)

# சாவகச்சேரி நிதி...

பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த 18 இலட்சத்து 91 ஆயிரத்து 21 ரூபாய் பணத்தினை வங்கியில் வைப்பிலிடுவதற்காக எடுத்துள்ளனர்.

இதன்போது கத்தியோடு உள்நுழைந்த கொள்ளையர் ஒருவர், அங்கிருந்தோரை அச்சுறுத்தி பணத்தினை கொள்ளையிட்டு சென்றார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் தனர்.

நிதி நிறுவனத்தின் காசாளரான பெண் பணியாளர் ஒருவரால் திட்டமிட்டு இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

அதனடிப்படையில் அவரது இரண்டு நண்பர்களே கொள்ளையிடுவதற்கு நிதி நிறுவனத்துக்கு வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் நிதி நிறுவனத்துக்குள் கத்தியுடன் புகுந்து கொள்ளையில் ஈடுபட்டார் என்று தெரியவந்தது.

அதனடிப்படையில் நிதி நிறுவனத்தின் பெண் பணியாளர் உள்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், கடந்த 19.09.2018 காலை வெறும் 50 ஆயிரம் ரூபாய் மாத்திரமே கத்தி முனையில் நாடகமாடி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த நிதி நிறுவனத்தில் 18இலட்சத்து 91ஆயிரத்து நூற்றுப்பத்து ரூபாய் இதுவரை காலத்துக்குள் இல்லாமல் போயுள்ளது.

இந்த சம்பவத்தை மறைத்து முழுத் தொகை பணமும் கத்தி முனையில் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறி இழப்பீட்டு காப்புறுதி பெற்றுக் கொள்ளவே தனது நண்பர் ஊடாக இந்த கொள்ளை நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.சாவகச்சேரி பொலிசார் குறித்த பகுதியில் உள்ள பாதுகாப்பு கமராவில் கொள்ளையர்களை இனங்கண்டுள்ளனர்.

இருப்பினும் மோட்டார் சைக்கிள் இலக்கம் மூடி மறைக்கப்பட்டுள்ளது.பின்னர் கொள்ளையர்கள் சென்ற வழியில் உள்ள சகல பாதுகாப்பு கமராக்களையும் பொலிசார் கண்காணித்துள்ளனர்.மோட்டார் சைக்கிள் ஏ9 வீதியில் ஏறும் போதே மோட்டார் சைக்கிள் இலக்கத்தை பொலிசார் கண்டுபிடித்து அதனூடாக விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த பெண் 18ம் திகதியே கொள்ளை நாடகத்தை அரங்கேற்ற இருந்ததாகவும் அந்த சமயம் நிதி நிறுவனத்தில் ஏனைய உத்தியோகத்தர்கள் காணப்பட்டதால் கொள்ளை நாடகம் 19ம் திகதி காலை ஏனைய ஊழியர்கள் வருவதற்கு முன்பாக அரங்கேற்றப்பட் டுள்ளது. அத்துடன் 18ம் தேதி இரவு கொள்ளையடிக்க் வந்த நண்பருடன் சாவகச்சேரி பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்றதையும் விசாரணைகள் மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த விசார ணைகளின் மூலம் குறித்த நிதி நிறுவ னத்தில் பணியாற் றும் பெண், அவரு டைய இரு நண்பரகள என மூவரையும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைது செய் ததுடன் கொள்ளைக்கு பயன்படுத்திய விலை உயர்ந்த மோட்டார் சைக்கிளையும் கைப் பற்றியுள்ளனர்.

நேற்று புதன்கிழமை மாலை சாவகச்சேரி நீதிமன்றில் கைது செய்யப்பட்ட மூவரும் நிறுத்தப்பட்டனர். இவர்களை எதிர்வரும் ஒக்டோபர் 9ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-9.30)


## அறிவித்தல்
### பருத்தித்துறை பிரதேச சபை
### ஆதனப்பெயர் மாற்றம்

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி உப அலுவலக நிர்வாக எல்லைக்குட்பட்ட ஆதனங்களின் வரி மதிப்பீடு மற்றும் மீள் வரி மதிப்பீடு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆதனப்பெயர் மாற்றும் நடவடிக்கைகள் 01.10.2018-ம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் வரும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.
26.09.2018 (சி-3963)

## வேலைக்கு ஆள் தேவை

தீபன் கிறியேசன் ஸ்டூடியோ மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். வீடியோ எடிட்டிங் தெரிந்தவர்கள் அல்லது பழக விரும்புவோர் கீழ்வரும் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.**

(5002)

**தொடர்பு: 0776216741, 0752278354**

## பகிரங்க அறிவித்தல்
### பருத்தித்துறை பிரதேச சபை.
### ஆதன மதிப்பீடும் மீள்மதிப்பீடும்

பருத்தித்துறை பிரதேசசபையின் புலோலி உபஅலுவலக நிர்வாக எல்லைக்குட்பட்ட ஆதனங்களில் வரிமதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாத வட்டாரங்களில் ஆதனவரி மதிப்பீடு செய்வதற்கும் வரிமதிப்பீடு செய்யப்பட்ட வட்டாரங்களில் மீள்மதிப்பீடு செய்வதற்கும் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினை சேர்ந்த உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடவுள்ளார்கள். 01.10.2018 ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் காலை 6.00 மணிமுதல் பிற்பகல் 6.00மணி வரை இப்பணி தொடரவுள்ளது.

சகல வரியிறுப்பாளர்களும் மேற்படி கடமையில் ஈடுபடும் விலைமதிப்பீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் தங்கள் ஆதனங்களுக்கு வருகை தரும்போது அவர்களிற்கு பூரண ஒத்துழைப்பினை நல்கி கடமையை இலகுவாக நிறைவேற்ற உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

1989ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேசசபைச்சட்டத்தின் அத்தியாயம் 139(1) இன் பிரகாரம் இவ்அறிவித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

தவிசாளர்
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.
26.09.2018 (C-3964)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## துயர் பகிர்கின்றோம்

அமரர் **நடராசா வள்ளிப்பிள்ளை**



26.09.2018 நேற்று இறைபதமடைந்த யா/நவாலி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் **திரு.ந.கோபாலகிருஸ்ணன்** அவர்களின் பாசமிகு தாயார் அமரர் **நடராசா வள்ளிப்பிள்ளை** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(5807)

**பாடசாலைச் சமூகம்**
**யா/நவாலி மகா வித்தியாலயம், மானிப்பாய்**

## கண்ணீர் அஞ்சலி



அமரர் *இரத்தினகோபால் சுந்தரம்மா*

Ruba Versatile Traders நிறுவனத்தின் உரிமையாளர் திரு. **இ.ஜெயராசா** அவர்களின் அன்புத் தாயார் **இரத்தினகோபால் சுந்தரம்மா** அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவ பிரதிநிதி மருத்துவ விற்பனைப் பிரதிநிதிகள்
(Jaffna medical delegatates association North Province)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 28.08.2018 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் ஆழ்வான் தங்கராசா**

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 27.09.2018 வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (கரவெட்டியில்) நடைபெற்று அஸ்தி செல்வச் சந்நிதி தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ நாரதா வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

அமரர் *பொன்னுத்துரை மகாலிங்கம்*



எமது அன்பு நண்பர் திரு.மயூரதன் (Sunshine heath care Senior field manager) அவர்களின் அன்புத் தந்தை பொன்னுத்துரை மகாலிங்கம் அவர்களின் அகால மரணத்தினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவ பிரதிநிதி மருத்துவ விற்பனைப் பிரதிநிதிகள்
(Jaffna medical delegatates association North Province)

## தமிழர் தாயகம் எங்கும்...

க்ளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபனின் 31ஆவது ஆண்டு நினைவேந்தலின் 12ஆம் நாளான இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று நல்லூரில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

யாழ்ப்பாண மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் கட்சி பேதங்களின்றி அனைவரும் ஒன்றிணைந்து நடத்தினர்.

நல்லூர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள திலீபன் உணவு ஒறுப்பு இருந்த இடத்தில் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் உடபட பெருமளவானோர் பங்கேற்று தீபம் ஏற்றி நினைவேந்தலைக் கடைப்பிடித்தனர்.

அத்துடன், திலீபனின் தியாகத்துக்கு மதிப்பளித்து இருவர் பறவைக் காவடி எடுத்து தூபி முன்பாக வந்து இரண்டு காவடிகளும் ஒன்றிணைந்து அகவணக்கம் செலுத்தினர்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக, உணவு ஒறுப்பு போராட்டத்தை இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயர் கொண்ட திலீபன் முன்னெடுத்திருந்தார்.

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமான போராட்டம் 12 நாட்கள் நடைபெற்று செப்ரெம்பர் 26 ஆம் திகதி, திலீபனின் வீரச்சாவுடன் நிறைவுக்கு வந்திருந்தது.

12 தினங்களும் நீராகாரம் எதுவுமின்றி திலீபன் போராட்டம் நடத்தியிருந்தார்.

தியாக தீபத்தின் நினைவேந்தலில் அவர் வீரச்சாவடைந்த நினைவு நாளான நேற்று தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்களால் நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது. (ம-9)

## சர்வதேசம் தலையிடு...

ஐக்கிய நாடுகள் சபையின் 73ஆவது பொதுச்சபை அமர்வில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னர் நாடு இருந்த நிலைமை தொடர்பிலும் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான நீண்ட கால பயங்கரவாத யுத்தத்தை பற்றி கவனம் செலுத்துகின்றபோதும் எல்ரீரீஈ பயங்கரவாத யுத்தம் முடிவுக்கு வந்து 10 வருடங்களாகின்றன. இந்த 10 வருங்களில் நாம் பல்வேறு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். குறிப்பாக எமது அரசாங்கம் கடந்த மூன்றரை வருடங்களில், குறிப்பாக யுத்தத்தின் பின்னரான காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளை பரந்தளவில் நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், மீண்டுமொரு யுத்தம் ஏற்படாது தடுத்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்ட செயற்பாடுகளை நிறைவேற்றியிருப்பதுடன், நிறைவேற்ற வேண்டிய விடயங்களை சிறந்த முறையில் முன்னெடுத்து வருகின்றோம். ஆகையால் மனித உரிமைகள் பற்றிய விடயத்தில் நாம் எமது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மிகச்சிறந்த முறையிலும் பரந்தளவிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு நாடு என்ற வகையில், எமக்கு அனைத்து நாடுகளினதும் ஐ.நா சபையினதும் ஒத்துழைப்புக்கள் மென்மேலும் கிடைக்கப்பெற வேண்டுனெ நான் மிகவும் கௌரவமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

உலகத்தின் மிகவும் பலம்வாய்ந்த ஒரு பயங்கரவாத அமைப்பபே இலங்கையின் பாதுகாப்பு படையினரால் தோற்கடிக்கப்பட்டது. ஆகையால்தான் இன்று இலங்கை பிரிக்கப்படாத, சிதைவடையாத, நிலையான சமாதானத்தைக் கொண்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது. ஆகையால் இலங்கையில் நிலையான சமாதானத்தையும் ஐக்கியத்தையும் மேலும் உறுதிப்படுத்துவதற்கு எமது பாதுகாப்பு படைகள், பலம்மிக்க பயங்கரவாத அமைப்பொன்றினை தோல்வியடையச் செய்த வரலாற்றுக் கடமையை மிகுந்த கௌரவத்துடன் ஞாபகப்படுத்துவதுடன், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் மேற்கொண்ட அந்த பாரிய அர்ப்பணிப்புக்கு எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த யுத்தம் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் முடிவடையும் இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை மீது மதிப்பை கொண்டிருக்கும் அனைத்து உலக நாடுகளிடமும், எனது தாய்நாட்டை புதிய எண்ணத்துடனும் புதிய கண்ணோட்டத்துடனும் நோக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒரு பாரிய யுத்தம் முடிவுக்கு வந்து சமாதானம் நிலைத்துவரும், தேசிய நல்லிணக்கமும் ஒற்றுமையும் பலப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கும் ஒரு நாட்டில், மனித உரிமைகளை பரந்தளவில் பலப்படுத்தியிருக்கும் நாடென்ற வகையில், எதிர்கால பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கு உகந்ததாக எனது நாட்டை பரந்த நல்லெண்ணத்துடன் நோக்குவதுடன் எமக்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குங்கள் எனவும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாட்டின் இறையாண்மையும் சுயாதீனத்தன்மையும் முக்கியமானதாகும். எனவே அதனைப் பாதுகாத்தவாறு எம்மால் முன்னெடுக்கப்படும் மனிதநேய செயற்பாடுகள், ஜனநாயகத்தை பலப்படுத்தும் செயற்பாடுகள் உள்ளிட்ட பரந்த பணிகளை செயற்படுத்த உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை கேட்டுக் கொள்கிறேன். எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு எம்மால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளும் அர்ப்பணிப்புக்களும் மிக முக்கியமானவையாகும். எந்தவொரு வெளிநாட்டு தலையீட்டையும் அச்சுறுத்தல்களையும் ஒரு சுயாதீன நாடென்ற வகையில் ஏற்க நாம் தயாராக இல்லை. அனைத்து வகையிலும் பலமான நாடு என்ற வகையில் நான் உங்களிடம் கேட்டு நிற்பது, எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கும், ஒரு சுயாதீன நாடு என்ற வகையில் எமது உரிமைகளை உறுதிப்படுத்தியவாறு முன்னோக்கிச் செல்வதற்கும் எமக்கு இடமளியுங்கள் எனக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால் இங்குள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, இலங்கையர் என்ற வகையில் தீர்த்துக் கொள்ளவேண்டிய பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம் என்பதுடன், அதற்கு உங்களது ஒத்துழைப்பினை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்வதுடன், எனது தாய்நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் சந்தேகம், பீதி, அவநம்பிக்கை ஆகியவற்றை இல்லாதொழித்து அனைத்து இனங்கள் மத்தியிலும் பலமான நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு என்ற வகையில் நாம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு உங்களது ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (ம)

## அகிம்சை வழி போராட்ட...

நீத்த காலை நேரம் 10.48 ஐ நினைவுகூர்ந்து இக் கூட்டம் காலை 11 மணிக்கு தொடங்கியது.

ஜனநாயக முறையில் அகிம்சை வழியில் போராடி உயிர் நீத்த ஒருவரின் வாழ்க்கை இன்றைய ஜனநாயக, அகிம்சை வழி அரசியல் போராட்டங்களுக்கு ஒரு முன்னோடியாக அமைந்திருந்தது. ஆகவே தான் அவர் நினைவுக்கு மதிப்பளித்து இக் கூட்டத்தைச் சற்று தாமதித்துத் தொடங்குகின்றோம்.

வட பகுதியின் சுற்றுலா அபிவிருத்தி வளர்ச்சியடையாமைக்கு இப் பகுதியில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் ஒரு காரணமாக காட்டப்பட்டுள்ளது.

ஆனால் யுத்தம் நிறைவுக்கு வந்து 9 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியானது மிகவும் மந்தமான கதியில் நகர்வது வருத்தத்திற்குரியது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் இங்கு மிகக் கூடிய அளவிலான சுற்றுலா மையங்களும் புராதன சின்னங்களும் வரலாற்றுப் பதிவுகளும் மற்றும் இன்னோரன்ன பாரம்பரிய கலை கலாசார விழுமியங்களும் காணப்படுகின்றன.

அவற்றை முறையாக வரிசைப்படுத்தி எமது புராதன சின்னங்களின் வரலாற்றுப் பதிவுகளை சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் காட்சிப்படுத்த வேண்டும்.

சரித்திரம் சில இடங்களில் பிறழ்வாக எடுத்துரைத்து வரப்படும் இக்கால கட்டத்தில் எமது பாரம்பரியத்தின் உண்மை நிலையை உலகிற்கு எடுத்துக் காட்டப்படுவது அத்தியாவசியமாகின்றது என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.(ம-9)

## தாயார் முறைப்பாடு...

முறைப்பாடு தொடர்பில் அவரது வீட்டுக்குச் சென்றிருந்த பொலிஸாரே வாளை மீட்டதுடன், சந்தேகநபரையும் கைது செய்தனர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

கோண்டாவில் பகுதியில் வசிக்கும் தாய் ஒருவர் தனது மகனால் தனக்கு அச்சுறுத்தல் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் முறைப்பாடு செய்துள்ளார். தன்னுடன் மகன் முரண்படுவதாகவும் அதனால் தனக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குடும்பப் பெண்ணின் முறைப்பாடு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட அவரது மகனிடம் வீடு தேடிப் பொலிஸார் விசாரணைக்குச் சென்றிருந்தனர்.

அங்கு கூரிய வாள் ஒன்று மீட்கப்பட்டது. அதனை தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடவேண்டும் என்று பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

சந்தேகநபர் அயலில் உள்ள ஆலயத்தின் வழிபடுவோர் சபை உறுப்பினராக உள்ளார். அந்த ஆலயத்தில் நவராத்திரி வழிபாடுகள் ஆரம்பமாக உள்ளன.

நவராத்திரி நிறைவு நாளின் மானம்பூ திருவிழா இடம்பெறவுள்ளது. அந்தத் திருவிழாவின் போது வாழைவெட்டு உற்சவம் இடம்பெறும். அதற்குப் பயன்படுத்தும் ஆலயத்துக்குரிய வாள்தான் பொலிஸாரால் சந்தேகநபரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டது.

அந்த வாளை தோய்ந்து (சீரமைத்து) அதனை ஆலயத்துக்கு வழங்க என வீட்டுக்கு எடுத்து வந்து வைத்திருந்தார். சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்று சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வே.விஜயரட்ணம் மன்றில் உரைத்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று சந்தேகநபரை வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (ம-9)





யா/நடேஸ்வரக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றும் எமது நண்பன் திரு.கு.விமலன் அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம்-I இற்கு (SLPS I) 2015ஆம் ஆண்டு முதல் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரை வாழ்த்துவதோடு மேலும் கல்விப் புலத்தில் மிளிர்ந்து பல சிறப்புக்களையும் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்
கு.திலீபன், ப.கணேசன்

(5808)



ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 26-09-2018 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 877 |

ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 3 6 8 3 0 6

தேசிய லொத்தர் சபை

தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2018-09-26 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 54 |

ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 03 08 56 71

தேசிய லொத்தர் சபை

கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.09.26 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1894 |

ஆங்கில எழுத்து: F
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 03 17 37 59

தேசிய லொத்தர் சபை

## 195 ரூபாயால்...

விலை 195 ரூபாயாலும் 5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 78 ரூபாயாலும் 2.5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 36 ரூபாயாலும் அதிகரிக்கப்படுகிறது.

இதன்மூலம் ஆயிரத்து 628 ரூபாயாகக் காணப்பட்ட 12.5 கிலோகிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்து 823 ரூபாயாக நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அலுவல்கள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (ம)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-3873)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 450/= மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும். U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு: 077 868 9500
(5797)

வீடு வாடகைக்கு

சிறிய குடும்பத்துக்கு ஏற்ற மின்சார வசதி, குடிநீர் வசதியுள்ள சிறிய வீடு புலோலி பாடசாலைக்கு அருகில் வாடகைக்கு உண்டு.
வாடகை : ஆயிரம் ரூபாய்
முற்பணம் : இல்லை
(C-3967)
தொடர்பு: 076 431 5258


## அமெரிக்க ஜனா...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் 73-வது அமர்வில் பங்கு கொள்வதற்காக அமெரிக்காவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்விற்கான வரவேற்பின் போதே இருநாட்டு ஜனாதிபதிகளும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது அமெரிக்க ஜனாதிபதியின் துணைவி மெலினியா டிரம்ப் மற்றும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் துணைவியார் ஜெயந்தி சிறிசேனவும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் குறித்த கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருக்கும் அனைத்து அரச தலைவர்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் வழங்கப்பட்ட விசேட இராப்போசன விருந்துபசாரம் கூட்ட தொடருடன் இணைந்ததாக நியூயோர்க் மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## துயர் பகிர்கின்றோம்



(5805)

### திருமதி செந்தமிழ்ச்செல்வி சிவசாமி

திரு. சிவசாமி கிருபாகரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி செந்தமிழ்ச் செல்வி சிவசாமி அவர்கள் நேற்று முன் தினம் (25.09.2018) செவ்வாய்க்கிழமை காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/வேலணை மத்திய கல்லூரி.**


மங்களபதி ஆரோக்கிய உணவுகள் - விற்பனைக் கண்காட்சி

சிறுவர் முதல் பெரியவர்வரை உண்ணக்கூடியதும் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அதிகரிக்க வல்லதும் மேலும் நீரிழிவு, உடற்பருமன், இருதயவியாதிகள், ஹோமோன் குழப்பங்கள், உயர்ரத்த அழுத்தம், குடற்புண்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவை வராமல் தடுக்கவும் உடன் தயாரித்து உண்ணக்கூடியதுமான உணவு வகைகளை இன்று மற்றும் நாளை பண்ணையில் இடம்பெறும் உலக சுற்றுலாதின கண்காட்சியில் பெற்றுக் கொள்ளலாம். மங்களபதி ஆயுர்வேத வைத்தியசாலை நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே இல.: 0212054066

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
> அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(5804)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


# மரண அறிவித்தல்



பிறப்பு: 27.05.1949 - இறப்பு: 25.09.2018

## பொன்னுத்துரை மகாலிங்கம்

### (தாரகா டிரான்ஸ்போட் உரிமையாளர்)

உரும்பிராய் கிழக்கு மடத்தடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மகாலிங்கம் அவர்கள் நேற்று முன் தினம் (25.09.2018) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் அரியமணி தம்பதிகளின் மருமகனும், வசந்தநிதி அவர்களின் அன்புக் கணவரும், மயூரதன் (முகாமையாளர் - Sunshine health care Lanka Ltd North and East, செயலாளர் - உரும்பிராய் லயன்ஸ் கழகம்), பிரதீபா (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), தாரகா ஆகியோரின் அன்புத் தந்தையும், டொரிஷா, நிமலதாசன் (பிரதேச செயலகம், வேலணை), ஜெயந்தன் (மருந்தாளர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், டினேஸன், ஜோகித், கௌரீசன், திபாநிசா, சுருதி, காருண்யன் ஆகியோரின் அன்புப் பேரனும், வசந்தாதேவி, அற்புதலிங்கம் (பாண்டி), சந்திரலிங்கம், செல்வலிங்கம், வதனா, ஜெயலலிதா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேந்திரன், கருணாநிதி, தயாநிதி, சாந்திநிதி, சிறிநிதி, சிவநிதி, உதயநிதி, கலாநிதி, விக்னேஸ்வரன், ராசலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2018) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**மடத்தடி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(5794)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.